செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

உள்ளுறை

பூவை. கலியாண சுந்தர முதலியார்	பட
திருஞான சம்பந்தர் தேவாரம்	௪௪௩
சிவன்	௪௪௭
திங்கள்	௪௫௰
செந்தமிழே தீர்க்க சுவாகா	௪௫௧
குறுந்தொகை மூலமும் விளக்க உரையும்	௪௫௫
உளநூல்	௪௫௬
பொருணூல்	௪௬௪
பயனுள்ள கல்வி	௪௬௭
அரியனபத்து	௪௭௩
ஸெயின்ட் ஆல்பன்ஸ்	௪௭௪
மத்தவிலாசப் பிரகசனம்	௪௭௫
புராணங்கள் உண்மை...றுகளா?	௪௭௯
தமிழர் நாகரிகம்	௪௮௧
வாழ்த்துப்பா...	௪௮௪
பேருண்ம...தல்	௪௮௬
சதகுப்...	௪௮௭
செய்திகளும் குறிப்புகளும்	௪௮

DIGITIZED

031ம211, N26

N34-12-10

199649

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.

...யாப்பம் ரூ. 3. பவ - வைகாசி தனிப் பிரதி

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

(Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

2. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.

3. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்;
உதவித் தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

4. ,, துடிசைக்கிழார் சிதம்பரனாரவர்கள்,
போலிஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், நாமக்கல்.

5. ,, பண்டிதமணி. மு. கதிரேசஞ் செட்டியாரவர்கள்,
மகிபாலன்பட்டி.

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

8. ,, வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.
தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட்சேவியர் காலேஜ்.

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
தமிழாசிரியர்,

10. ,, காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A.,
திருமபுரவாதீன வித்துவான், சென்னை.

BOOKS FOR RESEARCH.

	Rs.	As.
A History of Indian Literature by M. Winternitz PH. D. Vol. I ...	10	8
Some Problems of Indian Literature by the same author	2	8
Indian Idea's in Education, Philosophy and Religion and Art, by Annie Besant D.L. ...	1	8
Comparative Religion, by Prof. A. A. Macdon[illegible], M.A. ...	3	0
The Rights and Duties of India Citizen by the Rt. Hon. V. S. Sastri, P.C. ...	1	8
System of Buddhistic thought by Rev. S. Yamakami ...	10	2
Agastiyar in the Tamil Land by Mr. K. N. Sivaraja Pillai ...	3	

OFFICE OF THE REGISTRAR OF B[illegible]
27 JUL 1934



அஷ்டாவதானம்

பூவை-கலியாண சுந்தர முதலியார்

~~1845~~ 1854—1918.

ஓம

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௧௨	மெய்கண்டான் யாண்டு-௭௧௧ வைகாசித்திங்கள் 1934௵ மே௴—ஜூன்௴	பரல் ௰

திருஞான சம்பந்த அடிகள் தேவாரம்

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ள மொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனும நாவினவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலமே யவனே.

பதவுரை:—

வலிவலம் மேயவனே—திருவலிவலம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற சிவபெருமானே

உள்ளம் கள்ளம் ஒழிந்து ஒல்லை ஆறி ஒன்றி—(நான்) எனது உள்ளமானது ஐம்புலன்களோடு உலக இன்பம் நாடிச் செல்கின்ற வஞ்சனையினின்று நீங்கி, அதனால் விரைவில் அமைதி அடைந்து, அதனால் நின்னோடு கலந்துநின்று தூய்மை பெற்றும்

வெய்ய சொல்லை ஆறித் தூய்மைசெய்து (உம்)—(எனது நாவானது) எவ்வுயிரினிடத்தும் துன்பந்தரும் கொடுஞ் சொல்லைச் சொல்லாது தணிந்து தூய்மை பெற்றும்

காமவினை அகற்றி (உம்)—(எனது மெய்யானது) உலகப் பொருளை நுகரும் செயலினை நீங்கித் தூய்மை பெற்றும்

நல்ல ஆறு—(இவ்வாறு எனது உள்ளம், நா, மெய் ஆகிய மூன்று கருவிகளும்) தூய்மைபெற்றிருக்கிற நல்லவழியில்

உன்றன் நாமம்—நினது திருப்பெயராகிய அஞ்செழுத்தை

வல்ல ஆறு—வீட்டின்ப மாகிய நற்பயனை எனக்கு அளிக்கவல்ல வழியில்

19649

இன் நவின்று ஏத்த—எனது நாவானது இடைவிடாது ஓதி உட்பொருளை உணர்ந்து கரைந்துருகித் துதிக்கும்படி
வந்து—எனது உள்ளத்தில் விளங்கி நின்று
நல்காய்—தண்ணளி செய்து காத்தல் வேண்டும்.

விளக்கவுரை:—

உயிர்ப்பற்று பொருட்பற்றுக்களை நீக்கி வீட்டின்பத்தை அடைய யோகத்தில் முயலும் அடியார்கள் தங்கள் உள்ளம், நா, மெய் மூன்றும் தூயனவாகச் செய்து சிவபெருமானுடைய அஞ்செழுத்தை ஓதல் வேண்டும் என்றும், அவ்வாறு ஓதுதற்குத் துணை செய்யும்படி அவர்கள் சிவபெருமானை வேண்டிக் கொள்ளல் வேண்டும் என்றும் **திருஞான சம்பந்த அடிகள்** தம்மேல் வைத்து இந்தத் தேவாரப் பாட்டைக் கூறியருளினார்.

உள்ளம் கள்ளம் ஒழிந்து ஒல்லை ஆறி ஒன்றி—1. கள்ளம் ஒழிதல், 2. ஆறுதல், 3. ஒன்றுதல் ஆகிய மூன்று செயல்களும் உள்ளத் தூய்மையைச் சேர்ந்தன. அவை மூன்றும் முறையே ஒன்றுக்கொன்று ஏதுவும் பயனுமாயுள்ளன. ஐம்புலன்களுடன் சென்று உலக இன்பம் நாடித் துய்த்தலை ஒழிதலினால் உள்ளம் அமைதி அடைதலும், உள்ளம் சிவபெருமானைப் பற்றி அவனோடு கலந்திருத்தலும் உண்டாகின்றன. பின்னே, மெய்க்குத் தனிப்படவுரியதாய், அகற்றல்வேண்டும் எனக் கூறப்பட்ட காமவினையை உள்ளத்திலும் ஒழிதல் வேண்டும் என்பார் "கள்ளம் ஒழிந்து" என்றும், நாவுக்குத் தனிப்பட உரியதாய் வெய்ய சொல்லை ஆறுதல் வேண்டும் எனக் கூறப்பட்ட ஆறுதலை உள்ளத்திலும் செய்யவேண்டும் என்பார் "ஒல்லை ஆறி" என்றும் கூறியருளினர்.

உள்ளத்தில் ஒரு கருத்துத் தோன்றாது அதனை நாவினாற் கூறுதலும் மெய்யினால் அடைதலும் உண்டாகாது. கள்ளமொழிந்து என்பதனால் மெய்யினால் உலக இன்பம் துய்த்தல் வீட்டின்பம் விரும்பும் அடியார்களுக்கு ஆகாது என விடப்பட்ட உலக இன்ப விருப்பத்தை உள்ளத்திலும் கொள்ளாது அறவே ஒழித்தல் வேண்டும் என்பதும், ஒல்லை ஆறி என்பதனால் உலக இன்பம் துய்த்தலுக்குத் தடை செய்கிறவர்களிடத்துச் சொல்லும் கொடிய சொற்களுக்குக் காரணமாயுள்ள சினத்தை உள்ளங்கவர்ந்தெழாதபடி செய்தல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன. உள்ளமானது இறைவனைப் பற்றிக் கலந்திருத்தலுக்கு அதனிடத்து எழும் உலக இன்பவிருப்பமும் சினமும் தடைகளாயிருந்து மயக்க அறிவை உண்டுபண்ணுதலின் அவை விலக்கப்பட்டன. மெய்க்குக் காம வினையகற்றுதல் என்ற மெய்ச் செயலும், நாவுக்கு வெய்ய சொல்லை ஆறுதல் என்ற நாச்செயலும் கூறப்பட்டிருத்தலையும், உள்ளத்துக்கு அவ்விரண்டு செயல்களுடன் இறைவனுடன் ஒன்றுதலையும் சேர்த்து மூன்று செயல்களும் கூறப்பட்டிருத்தலையும், மெய்க்குக் கூறப்பட்ட "அகற்றி" என்ற சொல்லுக்குச் சரியாக உள்ளத்துக்குக் "கள்ள மொழிந்து" எனக் கூறியிருத்தலையும் நாவுக்குக் கூறப்பட்ட வெய்ய சொல்லை "ஆறி" என்பதற்குச் சரியாக

உள்ளத்துக்கு "ஒல்லை ஆறி" என்று கூறியிருத்தலையும் உற்று நோக்குக.

கள்ளம் என்பது பொய், வஞ்சனை. உயிருக்கு நிலையான இன்பம் இறைவனை அடைதலில் இருக்க, அதற்குமாறாக ஐம்புலன்கள் உலகப் பொருள் நுகர்வில் உள்ளத்தை ஈர்த்துச் செலுத்துதல் இங்கே "கள்ளம்" என்று கூறப்பட்டது. **மாணிக்க வாசக அடிகள்** "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழிஅடைத் தமுதே—யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதியுள் யுள்ளவா காண வந் தருளாய்" என்று கூறியருளினமை காண்க.

ஒல்லை ஆறி—ஆறுதல் என்பது சூடுதணிதல். தீயானது உடலைச் சுட்டுத்துன்பம் செய்தல் போல சினமானது உள்ளத்தைச் சுட்டுத் துன்பம் செய்யும். ஆதலின் அச்சினத்தினின்றும் தணிந்து தண்மை கொள்ளுதலை ஆறி என்று கூறியருளினர். ஒல்லை—விரைவாக. சினமுள்ள சொல்லை நாவினாற்கூறாது தணிந்த வெய்ய சொல்லைஉள்ளத்திலும் காலம் நீட்டிக்காது ஆறுதல் வேண்டும் என்பார் ஒல்லை ஆறி என்றார்.

ஒன்றி ஒன்றுதல்—இறைவனோடு சேர்தல்—உள்ளம் உலகப் பற்றை விடுதலும் இறைவனைப் பற்றுதல் ஒருதலையாதலின் ஒன்றி என்றார். இவ்வாறு உள்ளம் இறைவனோடு இரண்டற (அத்துவிதமாய்) ஒன்றுதல், உள்ளத்தை உடைய உயிர் பேரின்பம் அடைதலுக்கு இன்றி அமையாது வேண்டப்படுவது.

பேரின்பம் அடைதலுக்குத் தடையாயுள்ளன, 1. அவிச்சை, (மயக்கம்) 2. அகங்காரம், 3. அவா, 4. ஆசை, 5. வெகுளி என்று கூறப்படும் பஞ்சக் கிலேசங்கள். இவ்வைந்தும் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றில் அடங்குவன. கள்ளம் ஒழிந்து என்பதனால் காமத்தை விலக்குதலும், ஒல்லை ஆறி என்பதனால் வெகுளியை விலக்குதலும், ஒன்றி என்பதனால் மயக்கத்தை விலக்குதலுங் கூறப்பட்டன. கள்ளம் ஒழிதல் மெய்யானது செயலற்றிருத்தலுக்கும், வெய்ய சொல்லை ஆறுதல் நா செயலற்றிருத்தலுக்கும், இறைவனோடு ஒன்றுதல் உள்ளம் நினைவற்றிருத்தலுக்கும், காரணங்களா யுள்ளன. உயிர் உலகத்தைப் பற்றிய செயலற்று, சொல்லற்று, நினைவற்று இருந்தாலொழிய வீட்டின்பம் அடைதல் முடியாது.

வெய்ய சொல்லை ஆறித் தூய்மை செய்து—வெய்ய என்பது சூடு என்ற பொருள்தரும். வெம்மை என்ற பண்புப்பெயர் அடியாகப் பிறந்த சொல்; சினத்திலெழுகின்ற சொல் சுடுசொல் ஆதலின் வெய்ய சொல் என்றார். வெய்ய சொல்லைச் சொல்லாது இன்சொல்லைச் சொல்லுதல் நாவுக்குத் தூய்மை ஆதலின் தூய்மை செய்து என்றார். தூய்மை செய்து என்று நாவுக்கு மாத்திரம் கூறப்பட்டது, இனம்பற்றி உள்ளத்துக்கும் மெய்க்கும் சேர்த்து உரையிற் கூறப்பட்டது.

காமவினை அகற்றி — இங்கே காமம் என்பது உலகப் பொருள் விருப்பம். காமவினை என்பது அவ்வுலகப் பொருள் விருப்பத்தால் உலக இன்பத்தை நுகரும் செயல்.

நல்ல ஆறு நாவினவின்று—நன்மையைத் தரும்வழி அதாவது பேரின்பத்தைத் தரும்வழி. இங்கே நன்மை என்றது உலக நெறியிலுள்ள தீமையோடு சேர்ந்த நன்மை அன்று; வீட்டு நெறியிலுள்ள தனி நன்மை. நல்ல ஆறு-மேலே கூறியபடி உள்ளம், நா, மெய் தூய்மை அடைந்த நல்லவழி. வீட்டு நெறியில் உள்ளம், நா, மெய் மூன்று கருவிகளும் தூய்மை அடைதல் மேற்செய்யக் கடவனவற்றிற்கு அடிப்படை (Background) யாகும்; இது இயமம் நியமங்களில் அடங்கும். "வஞ்சனையாலஞ் செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானை" என்று **திருநாவுக்கரசு அடிகள்** திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 4-வது பாட்டிற் கூறியருளினர்.

உன்றன் நாமம்—பிரணவ அஞ்செழுத்து அல்லது சி முதலாகக் கூறப்பட்ட அஞ்செழுத்து. பசு பாசங்களை விலக்கி, பதியை அடைதல் ஐந்தெழுத்தின் உட்பொருள் ஆதலின் அதனை நினைந்து உள்ளம் கரைந்து உருகி நவிலல் வேண்டும் என்று அடிகள் கூறியருளினர். "எந்தையார் திருநாமம் நமச்சிவாயவென் றெழுவார்க்கு இருவிசும்பி லிருக்கலாமே" என்று **திருநாவுக்கரசு அடிகள்** பலவகைத் திருத்தாண்டகத் தேவாரம் 10-வது பாட்டிற் கூறியருளினமை காண்க.

வல்ல ஆறு—மேலே சொன்ன நல்ல ஆறே வல்ல ஆறுமுள்ளது. அந்த நல்ல ஆறு பேரின்பப் பயனை விரைவில் அளிக்கவல்லதாதலின் வல்ல ஆறு என்று கூறப்பட்டது.

வந்து—இறைவன் உயிரினுடைய உள்ளத்தில் போக்குவரவிலாது எப்பொழுது மிருப்பவனாதலின் வந்து என்பதற்கு 'விளங்கி நின்று' என்று பொருள் உரைக்கப்பட்டது. இதுகாறும் உள்ளே மறைவாய் நின்று உணர்த்தின இறைவன் பக்குவப்பட்ட உயிர்க்கு நேரே வெளியில் அறிவுரை உணர்த்தித் தீக்கை செய்தற்கு வந்து என்று பொருள் கூறினும் அமையும். இந்தப் பதிகத்தின் 4-வது பாட்டில் "வையமுள்ளே வந்து நல்காய்" என்று கூறியது இப்பொருள் பொருந்துதலை அரண் செய்யும்.

நல்காய்—"ஆய்" என்ற முன்னிலை ஏவல் தெரிநிலை வினைமுற்று விகுதி இங்கே வேண்டிக் கோடற்பொருளில் வந்தது. நல்குதல் இங்கே தண்ணளி செய்தல் என்ற பொருளில் வந்தது; திருக்குறள் 1248-வது குறளில் நல்குதல் என்ற சொல்லிற்கு **பரிமேலழகர்** தண்ணளி செய்தல் என்று உரை கூறியிருத்தல் காண்க. இந்தத் தேவாரப் பாட்டின் கருத்து "காமம் வெகுளி மயக்கமிவை கடிந், தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி, ஓமெனு மோசையினுள்ளே யுறைவதோர், தாமமதனைத் தலைப்பட்டவாறே" என்ற 2436-வது திருமந்திரப் பாட்டிற் கூறப்பட்டிருத்தல் காண்க.

மா. வே. நெல்லையப் பிள்ளை

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

*சிவன்

[பண்டிதர் சி. வீரபாகுப் பிள்ளை அவர்கள்]

சிவன் என்னும் பெருந் தெய்வத்தை ஓவியப் புலவர் படத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். நம்முன்னோர் சித்திரகாரரைக் **கண்ணுள் வினைஞர்** என்கிறார்கள். கண்ணுள் வினைஞர் என்றால் "நோக்கினார்கண்ணிடத்தே தம்தொழிலைநிறுத்துபவர்" என்று பொருள். இவர்கள் எழுதும் கோலுக்கு (Brush) கண்ணெழுத்தங்கோல் என்று பெயர். அதனை,

மாமே விருந்தொரு கோல்தா எனிற்சுள்ளற் கோல்தாலும்
சோமே விருந்தொரு கோல்தா வெனிற்றா வே துணிந்து
பூமேவு கண்ணெழுத் தங்கோல் தாலும் பூதலத்தே
நாமே வியல்பென்று கூறுவர் நல்லசொல் நாவலரே.

என்பதால் அறியலாம்.

இந்தப் பரந்த உலகத்திலே எண்ணிறந்த சமயங்கள் உள்ளன. அவற்றுள் சைவ சமயமும் ஒன்று. ஆனால், இச்சமயம் மிகமேலானது. தாயுமான சுவாமியைப்பற்றித் தெரிந்திருக்கலாம் அவர்கள் சைவ சமய உண்மைகளைத் தெளிவாகவும் விளக்கமாகவும் சொன்னவர்கள். அவர்கள் எல்லாச் சமயங்களையும் ஆராய்ந்து முடிவில் சைவ சமயமே மேலானதென்று துணிந்து,

"சைவ சமயமே சமயம்"

என்றும்,

"ராஜாங்கத்தமர்ந்தது வைதிக சைவம்" என்றும் அருளிச் செய்திருக்கிறார்கள்.

சைவ சமயம் சிவத்தை முழு முதற் கடவுளாகக் கொண்டு உபாசிக்கிறது. சிவ: என்ற வடசொல் தமிழில் சிவன் என்று ஆகும். இவ்விதம் ஆவதை நன்னூல் விருத்தி உரைகாரர் "உவ்வுமாம் பிற" என்பதனால் அமைப்பார். மாணிக்கவாசக சுவாமிகள் "சிவனவனென் சிந்தையுள் நின்றவதனால்," "சிவனே சிவனே யென்றோலமிடினும்" எனச் சிவத்தைச் சிவன் என்று கூறுவ

* இஃது பாளையங்கோட்டை ஸ்ரீசாரதா தமிழ்ச் சங்கத்தார்நடாத்திய **நவராத்திரி விழாத் திருவுருவப் படவிளக்கச் சொற்பொழிவுக் குறிப்பு**

தைக் காண்க. சிவன் என்ற சொல்லுக்கு மங்கலகுணத்தன், அனாதியே மலத்தின் நீங்கினவன் என்பன பொருள். அவ்வித சிறப்பு வாய்ந்த சிவன் என்ற சொல்லையே சைவ சமயத்தவர்கள் தங்கள் கடவுளுக்குப் பெயராக இட்டிருக்கிறார்கள். இந்த அருமையான பெயர் வேறு எச்சமயக் கடவுளுக்குமில்லை. அதனால் தான் அப்பமூர்த்திகள் "சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்று அருளிச் செய்தார்கள்.

யாப்பருங்கலமென்று தமிழில் ஒரு சிறந்த இலக்கண நூல் இருக்கிறது. அந்நூலைச் செய்தவர் அருங்கலான்வயம் என்ற பிரசித்தி பெற்ற சைன சங்கத்தைச் சார்ந்த புலவரான அமிதசாகரர். அதற்கு உரை எழுதியவரும் சைனரே. அவர் திருமூலரை "ஆகவும் கேடவும் பாடல் தரும்..........மாமூலர்" என்று போற்றுகிறார். அவ்விதம் அந்நிய சமயத்தவரும் போற்றத்தக்க பெரியவர் திருமூலநாயனார். அவர்,

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை"

என்றருளிச் செய்தார்.

சிவநாமத்தைச் சொல்லுகிறவர்களுக்குச் சகல பாக்கியங்களும் கிடைக்குமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். சிவாக்கிய சோழ மன்னர் காலத்திலே, கஞ்சனூரிலே ஒரு அந்தணன் இருந்தான். அவன் அறியாமல் செய்த செயலால் ஒரு பசுவின் கன்று செத்துப்போய்விட்டது அதனை அறிந்த மற்ற அந்தணர்கள் அவனை ஜாதியை விட்டு நீக்கி வைத்துவிட்டார்கள். அவன், அப்பாவத்துக்குப் பிராயச் சித்தம் என்னவென்று தெரிந்துகொள்வதற்காக அவ்வூரில் உள்ள பெரியவராகிய ஸ்ரீ அரதத்த சிவாசாரியரிடம் போனான். அப்பொழுது, அவர் சிவ பூசை செய்துகொண்டிருந்தார். அவர் வீட்டு நிலை தாழ்ந்தது. அந்தணன் அவசரமாக வீட்டுக்குள் நுழையும் போது நிலை தட்டிவிட்டது. உடனே, அவன் 'சிவ சிவ' என்று சொல்லித் தலையைத் தடவினான். உள்ளே பூசையில் இருந்த அரதத்தர் அதைக் கேட்டு வெளியே வந்து அவனை வணங்கினார். அவன், "சுவாமி! நான் பசுவின் கன்றைக் கொன்றபாவி என்னை நீங்கள் வணங்கலாகாது" என்றான். அதற்கு அவர், 'நீ சிவசிவ' என்று இருமுறை அப்பெருநாமத்தைச் சொன்னதனால் உன் பாவமும் போயிற்று; நீயும் முத்திக்குரியவனாகிவிட்டாய்" என்றார். இச்சரித்திரத்திலிருந்து சிவ நாமத்தின் மகிமை விளங்கும். "விண்ணுறவடுக்கிய விறகின் வெவ்வழல், உண்ணிய புகிலவை யொன்றுமில்லையாம், பண்ணியவுலகினிற் பயின்ற பாவத்தை, நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே."

சைவ சமயத்தவருக்கு முக்கியமான மந்திரம் பஞ்சாக்கரம். அதனைத் திருவாசகம் "நமச்சிவாய வாழ்க" என்கிறது. அப்பமூர்த்திகள் "சிவாய நமவென்று நீறணிந்தேன்" என்கிறார்கள். திருவாசகம் சொன்ன 'நமச்சிவாய' என்பது தூல பஞ்சாக்கரம் எனப்படும். அப்பமூர்த்திகள் சொன்ன 'சிவாய நம' என்பது சூக்கும பஞ்சாக்கரம் எனப்படும். திருவாசகத்திலும் சூக்கும பஞ்சாக்கரமாகிய 'சிவாய நம' வந்திருக்கிறது. இப்பஞ்சாக்கரப் பொருளைப் பட்டினத்தடிகள்

"மாயநட்டோரையு மாயாமல மென்னும் மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன்சென்று பின் தாதையைக் கூடிப்பின் தாயைமறந்து
ஏயும்மே நிட்டையென்றான் எழிற்கச்சியே கம்பனே"

என்று அருளிச் செய்தார்கள். கடவுள், அவரது சத்தி, உயிர், உயிரைப்பற்றிய மலம் என நான்கு; உயிர் சிவ சத்தியின்உதவியால் மலத்திலிருந்து விலகி இறைவனைக் கூடி இன்புறுதல் என்பது தான் இந்தப் பெருமந்திரத்தின் பொருள்.

கடவுளும் உயிரும் அறிவுடைப் பொருள்கள்; ஆனால், கடவுள் அறிவுக்கும், உயிர் அறிவுக்கும் வித்தியாசம் உண்டு.கண்ணுக்கும் ஒளியிருக்கிறது, சூரியனுக்கும் ஒளியிருக்கிறது. ஆனால், கண் தனக்கு இயல்பாக அமைந்த ஒளியால் பொருள்களைப் பார்க்கமுடியாது. சூரிய ஒளியாகிய வியஞ்சகத்தாற்றான் அக்கண்ணொளி பொருள்களைப் பார்க்கமுடியும். இரவில் கண் விழித்திருந்தாலும் பொருள் பார்க்கமுடியவில்லை. ஆகவே அதற்கு, மற்றொன்றின் ஒளி காட்சிக்கு இன்றியமையாததாகிறது. அது போல, உயிர் இயற்கையறிவுடையதாக விருந்தாலும் பிறிதின் உதவியில்லாமல் அதன் அறிவு விளங்காது. கடவுள் அறிவு தானே அறியுந் தன்மையுடையது. அவ்வறிவுக்கு வேறு ஒன்றின் சகாயம் வேண்டியதில்லை. அப்பேரறிவின் உதவியாலேயே உயிர் அறிவு விளங்கி அந்த அறிவுப் பொருளாகிய கடவுளை—"தேய நாதனை," தியானித்து அது இன்பமடைகிறது. இவ்வுண்மைகளெல்லாம் அப்பஞ்சாக்கரத்தில் அமைந்துள்ளதென்பதே பட்டினத்து சுவாமிகள் கருத்து.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதனும நமச்சி வாயவே"

வேதம், அந்த மெய்ப்பொருள்—பஞ்சாக்கரமந்திரத்தைத் தன் நடுவில் வைத்துப் போற்றுகிறது. சிறந்த வேதம், ருக்கு,

யசுர், சாமமென மூன்று. அதனைச் "சிறந்த வேதம் விளங்கப் பாடி" என்றவிடத்து நச்சினார்க்கினியர் கூறுவதால் அறியலாம். அம்மூன்றுள் நடுவிருப்பது யசுர்வேதம், அதன் நடுவிருப்பது ஸ்ரீ உருத்திரம். அதன் நடுவிருப்பது 'நமச்சிவாய' என்னும் மகா மந்திரம். அதனாலேயே அப்பமூர்த்தியும் "அருமறையின் அகத்தானை" என்று அருளிச் செய்தார்கள். (தொடரும்)

திங்கள்

[மறைமலை யடிகள்]

திங்களை வடநூலார் "சந்திரன் என்னும் பெயரால் வழங்குவர்; தமிழ்மக்கள் அதனை நிலவு, அம்புலி, பிறை, திங்கள், தண்கதிர், கலையோன், இரவோன், அலவன், அல்லோன், மதி, களங்கன், குரங்கி, முயற்கூடு முதலான பலபெயர்களால் வழங்காநிற்பர்.

நிலவு—குளிர்ந்த ஒளியினைத்தருவது.

அம்புலி—சிறுமகாரிட்டபெயர்.

பிறை—மறைநிலா நாளின் (அமாவாசையின்) பின், புதிது பிறத்தலிற் பிறையெனப்பட்டது.

திங்கள்—தீம்+கள். இனிமையெனப் பொருள்தரும் தீம் என்னுஞ் சொற்குறுகித் திம் என் நின்று, அமிழ்து எனப் பொருள்படும் கள் என்பதுடன் கூடித் திங்கள் ஆயிற்று.

தண்கதிர்—குளிர்ந்த ஒளியினைத்தருவது.

கலையோன்—கலையென்பது நிலவொளியின் ஒரு பகுதியைக் குறிப்பது.

இரவோன்—இரவில் விளங்குபவன்.

அலவன், அல்லோன்—இராக்காலத்துக்குப் பெயராகிய அல் என்னும் பகுதியடியாப் பிறந்து இரவில் விளங்குபவன் என்னும் பொருடருவது.

மதி—பதினைந்துநாள் வளர்ந்தும் பதினைந்துநாள் தேய்ந்தும் முப்பதுநாள் கொண்ட ஒரு காலத்தை வரையறுத்தலான் மதி யெனப்பெயர் பெறலாயிற்று; மதித்தல் என்பது வரையறுத்தல்.

களங்கன்—இடையிடையே கறையுடையதுபோற் காணப்படுவது.

குரங்கி—வளைந்து தோன்றும் பிறை, (குரங்கு-வளைவு)

முயற்கூடு—சிறுமகார் கண்களுக்கு முயல்வடிவாகக் கறை காணப் படுதலிலிருந்து அம்முயல் உறையுங் கூடாக அவர் வழங்குவர். —(ஞானசாகரம்)

இலக்கணமும் இலக்கியமும்:
Language & Literature

"செந்தமிழே தீர்க்க சுவா கா"

[உயர்திரு. சுத்தானந்த பாரதியார்]

(௪௦௨ - ம் பக்கத் தொடர்ச்சி)

நமது அருள்மொழியும், வடமொழியும்

வடமொழியாக்க மில்லேல் தமிழுக்கு வலிவில்லை யென்பர் சிலர்; வடமொழி பெரிது, வண்டமிழ் சிறிதென வாதாடுவர் சிலர். ஒருகால், பெரியவன் சிவனா, விண்டுவா என்று இருவர் ஓயாச் சண்டை போட்டனர்; எவரும் சிவனையோ விண்டுவையோ கண்டதில்லை. ஒரு அறிவாளியிடம் தமது வழக்கையுரைத்தனர். அந்த அறிவாளி, "ஐயா, சிவனும் விண்டுவும் தங்கள் பெருமை பேச உங்களை வழக்காளராக ஏற்படுத்தினரா? நீர் சிவனைக் கண்டீரா? நீர் விண்டுவைக் கண்டீரா? நீர் சிவன் கட்சியைப் பேசாவிடில், அவன் பெருமை சிறுமையாமோ; நீர் சிறியனெனில் பெரியசாமி (மஹாதேவன்) சிறியனாவனோ? சண்டையால் உமது தொண்டைவற்றி, உமது மண்டையே உடைகிறது. அவரவர் கோயிலில் அவரவர் விளங்குகின்றனர். வேண்டுமானால் ஆளுக் கொரு தடி கொடுத்துப் பாருங்கள்" என்றதும் இருவரும் வாயடைத்தனர். தனது நாதப் பறையினின் றெழுந்த அகாரத்தினின்று இரு மொழியும் படைத்த இறைவன் தென்பால் அப்பனாய் அமர்ந்துளான். அவன் தமிழ்ப்பித்தன்; தமிழ்ப் பிள்ளைக்கு அருட்பாலூட்டி அறிவுப் பாமாலையை நாடோறுந் தலந்தோறும் அணிந்தவன்; தமிழ்மணி மொழியிற் சொக்கி அருளன்பர்க்குத் தூதுநடந்தான்; சோறுசுமந்தான்; கூலிவேலையும் செய்தான். தமிழமுதம் அவனது இன்பவுணவு; இன்றும் தேவாரதிருவாசகங்கள் அவனது அருட்சுவைத்தேனாக நமது செவிகளிற் பாய்கின்றன.

"பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைக டீர்வார்"

இப்படி யருள்பெற்ற ஒரு தொல்விளமொழியை இழிவென்றும், நீசமென்றும் (தமிழை Untouchable language என்னும் வடவரும் உண்டு) சூ.........பாஷையென்றும் க, ச,

ட,த,ப எனும் மெய்களில் பிறக்கும் நான்கொலிகளுக்கு மூன்று குறைவான வறண்மொழி (அரவம் அத்வானம் என்பர் வடுகர்) என்றும், வடமொழி, ஸம்ஸ்க்ருதம், தேவபாஷையே மேலென்றும் யாரேனும் இன்னும் வாய்பேசுவாராயின்,

> " ஆரியம்நன்று தமிழ்தீ தெனவுரைத்த
> காரியத்தாற் காலக் கோட் பட்டானைச் — சீரிய
> அந்தண் பொதிகை யகத்தியனா ராணையாற்
> செந்தமிழே தீர்க்க சுவா கா!"

என்று வலுவாக உருவிடுமின். அன்பர்காள், இச்சண்டையில் காலத்தை வீணாக்கவேண்டாம். இதோ நாம் வழங்கும் தமிழ் உயிரோடு இருக்கிறது. அதன் வளர்ச்சியில் ஒவ்வொரு மூச்சையும் செலவிடுங்கள்.

தமிழுக்கு இயல்பாயுள்ள அருள்வலிவால் இப்போதும் தமிழ்க் கொடியைத் தாழாது தாங்கி நிற்கும் அறிவாளிகள் ஆங்காங்குத் தோன்றித் தம்மாலானதைச் செய்கின்றனர் [கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரும், பொதுநிலைக் கழகத்தாரும், சைவ சித்தாந்த சபையாரும் செந்தமிழ்ச் செல்விக்குச் செய்யும் அன்புத் தொண்டு தமிழருக்கு எடுத்துக்காட்டாகுக] ஆனால் அத்தகைய நல்லறிவாளருக்குச் செல்வச் செழிப்பும், செல்வர் துணையும், பொதுமக்கள் ஆதரவும் போதுமட்டும் இன்னும் கிடைக்கவில்லை. தமிழை வளர்க்கும் பணியில் தமிழர் முழுதும் தமது உடல் பொருள் உயிரை உரிமையாக்க வேண்டும்.

௫. தமிழம்மை

தமிழகம் முழுதும் இறைவன், உயிர்மேனியன் அருள்வடிவுடன் விளையாடிய திருக்கோயில்; அதில் இன்றும் அவனருள் பெற்ற பாமணி முழங்குகிறது. அன்பீர், அக்கோயிலின் தென்வாயிலில் குமரியன்னை தமிழர்வாழத் தவம் புரிகின்றாள். இக்கோயிலில் நமது செந்தமிழ்த் தேவி சிரித்திலகச் செய்வோம். அவள் பொன்னுருவை ஒவ்வொருவர் உள்ளக்கோயிலிலும் உருச்செய்து ஒவ்வொரு மூச்சையும் அவளுக்கு அன்புமலராக்குவோம். நமது நரம்புகள் அவள் பணியில் இயங்குக. நமது கால்கள் அவள் பெருமையை உலகெங்கும் பரப்புக; நமது வாய் அவளிசை பாடுக; நமது வாழ்வெல்லாம் இத்தமிழம்மைக்கே வேள்வியாகுக! இந்தியநாட்டை "பாரதமாதா" வென்றும் சக்தியென்றும், பங்கிம் சந்திரரும் அரவிந்தரும் இயக்கியபிறகு நாடு முழுதும் ஓர் அன்னையன்பெழுச்சி பிறந்தது கண்கூடு.

> விந்திய மூலையினள் வெண்ம லைமுடிச்
> சுந்தரி சுரநதிச் சுருள்வி ரிந்தவள்

> செந்தமிழ் மடுத்தினி தாடுஞ் சேவடி
> யிந்தியைக் கிந்நக ரிதயத் தின்பமே. —பாரதசக்தி.

என்ற கற்பனை மக்கள் மனத்தில் ஒரு கடவுளன்பு ஊக்கியதால் நாட்டியக்கம் எவ்வளவு விரைந்து பரவியது; தாய்க்கு வணக்கம் (வந்தேமாதரம்) எங்கும் எழுந்தது. அதை நாமறிவோம். ஆதலின் நமது முதற்பணி தமிழை இறைவன் மகளாக உருச்செய்து, ஓவியஞ் சமைத்து உருகி வணங்குதல். நமது குழந்தைகட்கு தமிழம்மை, தமிழாயி, தமிழப்பன் என்று பெயர் தரலாம். திருக்கோயில்களிலும் தமிழன்னைக்குத் (தமிழ்க் கலைமகளுக்கு) தனியாகச் சிலை நாட்டலாம். அதன்முன் ஒரு பெரிய கலை மன்றம் எழுப்பி அதன்கண் தமிழ்மறையும், தமிழரின் அருட்சமயமும் வளரத்தக்க பணிகள் புரிதல் நலம்.

தமிழின் அருளழகு

தமிழம்மை அருள் வடிவு. ஷேக்ஸ்பியர், கோர்நெல், மோலியர், தாந்தே, வர்கில், ஹோமர், காளிதாஸன், டாகூர், ஈட்ஸ் முதலிய பெருங் கவிகளிடம் அழகை நுகரலாம். சிறிது உள்ளக் கிளர்ச்சியுடன் அது சரி. ஆனால் அப்பர், பாலருவாயர், அழகர், மணிமொழியார், அருட்பெருஞ் சுடர் வள்ளலார், தாயுமானார், அருணகிரியார், சேக்கிழார்கள் முன்னே நமக்கு அழகுணர்வுடன், ஓர் அருளுணர்வும் உள்ள நெகிழ்ச்சியும் எழுந்து அவர்கள் சொல் நமது ஆவியை அள்ளி இறைவன் இன்பக் கடலிற் சேர்க்கிறது. உதாரணமாக,

> Where the mind is without fear
> This is my prayer unto Thee, my lord
> (*Gitanjali P-28*)

என்பன தாகூரின் பெயர்பெற்ற பாக்கள். இப்பாட்டையும், அருள் வள்ளலாரின், "ஒருமையுட னினதுதிரு" என்ற பாட்டு, அருள் வேண்டுதல், பிள்ளைச் சிறு விண்ணப்பம், பிள்ளைப்பெரு விண்ணப்பங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும். இவற்றைத் தக்கபடி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பா ரின்மையால் இவ்வருள் மணிச் சுடர்கள் குடத்தினுள் விளக்கா யிருக்கின்றன.

> "Cromwell, I charge thee, fling away ambition
> By that sin fell angels; how can man, then
> The image of the Maker hope to win by it?"
> (*King Henry* VIII: *iv: i*)

இது ஷேக்ஸ்பியரின் மிகச் சிறந்த மொழிகளி லொன்று. இதனோடு,

"ஆசையறுமின்கள்! ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைவர வரவாய் வருந் துன்பம்
ஆசைவிட விட ஆனந்த மாமே"

எனுந் திருமந்திரத்தை ஒப்பிடுங்கள். இம் மந்திரத்தை எத்தனை முறை உருப்போட்டும் சலிக்கவில்லை. இதில் ஒரு அருள் வலியும், அருளழகும் அருளாணையும் காண்கிறோம். இன்னும் தாயுமானவரின் "ஆசைக்கோ ரளவில்லை" யையும் பாருங்கள்.

"The Infinite glows through every living thing" என்று கெதே (Goethe) சொல்லுகையில் "பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே" என்னும் தாயுமானார் அருள் மொழியைச் சிந்தித்துப் பாருங்கள்;

"He who loves God cannot desire
That God should love Him in return"

என்பது கெதேயின் இசைபெற்ற வாக்கு. இதனோடு, "அன்றே யுனக்கென்.........நன்றே செய்வாய் குறை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்ற திருவாசக மொழியைச் சீர்தூக்கிப் பாருங்கள். கவிகளில் பல படிகள் உண்டு. ஷெல்லி, பைரன், கீட்ஸ், மோலியர், கோர்நெல் இவர்கள் ஒரு படி; ப்ரௌநிங் இவர்களுக்குமேல் ஒருபடி யேறினவன், ஹோமர் கெதே, தாந்தி, ஷேக்ஸ்பியர், வர்கில் முதலியோர் அழகும் சொல்லாழமும் உடையர். மில்தன் ஆவேசக் கவி. வால்ட்விட்மன் சிறிது ஒளி பெற்றவன்; இவர்களுக்கு மேலே வால்மீகியும், காளிதாஸனும், கம்பனும் உள்ளனர். இவர்கள் கவிகளில் அழகையும், ஆண்மையையும், பொருளாழத்தையும், அறவுணர்வையும் நுகரலாம். இதற்கு மேல் கீதை, உபநிடதம் எத்தனைமுறை ஓதினும் புதுப் புது இன்பம் தந்து ஒரு அறிவு மலர்ச்சியும் தரும். இவற்றிற்கு மேல் திருவாசகம், அருட்பா, தாயுமானார், தேவாரங்களைக் கேட்டால் "அரும்பொனே மணியே என்னன்பே" என்று உள்ளத்தில் ஒரு அருளெழுச்சி பிறக்கும்; மெய் சிலிர்க்கும். இவையே மிகவுயர்ந்தமந்திரக்கவிகள். இவை நமது ஆவியை ஊடுருவி, நம்முள் உள்ள அறிவு மணியைச் சாணைபிடித்து, அருளொளி பளிச்சிடச் செய்யும். ஆ! இவற்றைப் பிறமொழிகளில் ஆக்கினால் சுவை போய் விடுகிறதே! இத்தகைய அருள் மந்திரக் கவிகளே தமிழ்க் கவிகள். அருளாற் பொழியும் பா மழையிலேயே ஆன்மப் பயிர் செழித்துப் பேரின்பக் கனி பழுக்கும். தற்காலத்தும் அருளாளர் பாமாலைகளையே நாம் கொண்டாடற்குரியது. அத்தகைய அருட்கவிகள் இன்று தமிழகத்தை யோக நிலையினின்று அணி செய்கின்றனர். அத்தகைய அருட்புலவரின் மணிவாக்குகளைத் தமிழர் ஏற்றுப் போற்றவேண்டும். பிறநாடுகள் தங்கள் கவிகளையும் நாவலர்களையும் சிறப்பிப்பது போல உண்மையான தமிழ்க் கவிகளையும் நாவலரையும் தமிழர் சிறப்பிப்பது, தமிழன்னையின் வழிபாடாகும். மற்றப்படி ஒரு நிறையின்றி கண்ட பொருள்கள் மீது, இன்றிருந்து நாளை அழியும் பொருள்கள் மீது, தற்காலம் கவிகள் தொடுக்கப்படுகின்றன.

இவற்றிற்கு,

மந்திரப் பாமாலை மாதேவர்க்கே யளித்த
செந்தமிழே தீர்க்க சுவாகா

என்போம்.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

கடவுள் வாழ்த்து

எடுத்துக்கொண்ட இந்நூல் என்றும் நின்றுநிலவுதல் வேண்டிக் கடவுள் வாழ்த்துக் கூறுவான் தொடங்கிய ஆசிரியர், முருகன் காத்தலால் உலகத்தில் வாழும் உயிர்கள் எல்லாம் பாதுகாப்பை நாளும் பெறுவன ஆதலினாலும்; அகப்பொருளிலக்கணத்திற்குப் பொருந்த சிறந்த குறிஞ்சித் திணைக்குரிய இறைவன் முருகனே ஆதலினாலும்; வள்ளி நாயகியைக் களவில் ஒழுகித் தமிழ் மொழியின் அகத்திணை ஒழுக்கத்திற்குப் பொருந்த மணந்துகொண்டவன் ஆதலினாலும் அப்பெருமானையே நாமும் வணங்குவோமென எடுத்துக்கொண்ட நூற்கியையக் கடவுள் வாழ்த்துக் கூறுகிறப்பது.

கடவுள் வாழ்த்து — இரண்டாம் வேற்றுமைத் தொகை. கடவுள் என்பதற்கு மனம், மொழி, மெய் எனும் முக்கரணங்களையும் கடந்தவர் என்பது பொருள். அது 'உள்' விகுதி பெற்ற தொழிற் பெயர்; ஈண்டு ஆகு பெயராய் நின்றது.

"வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே"

(தொல்-பொருள் செய்யுளியல் சூ. 109)

என்றதன்கண், "வகை" என்ற மிகையானே கொண்ட அறு முறை வாழ்த்தே அன்றித் தனக்கும் பிறர்க்கும் பயன்படு வகையில் படர்க்கை யிடமாகிக் கடவுளை வாழ்த்தியது இக்கடவுள் வாழ்த்து என்க. "தாமரை" என்பது மங்கல மொழியாதலின் முதற்கண் வைக்கப்பட்டது. "தாமரை புரையும் காமர் சேவடி" எனச் சேவடியை முற்கூறியது என்னையோ எனின், அடைந்தார் அவாவுகின்ற அறமுதல் நான்கையும் அளிக்க வல்ல பெருஞ்சிறப்பால் என்க.

"மாநிலஞ் சேவடியாக" என நற்றிணையிலும் இவ்வாசிரியர் கூறியிருத்தல் காண்க.

இத்தொகைநூற்செய்யுட்கள் பெரும்பாலன ஈற்றயலடி முச்சீர்த்தாய நேரிசை ஆசிரியப் பாக்கள் என்க. என்னை?

> ஈற்றய லடியே ஆசிரிய மருங்கிற்
> றோற்ற முச்சீர்த் தாகு மென்ப"—
>
> (தொல்-பொருள்-செய் சூ. 68)

என்பதனால் அறிக.

பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது

> தாமரை புரையுங் காமர் சேவடிப்
> பவளத் தன்ன மேனித் திகழொளிக்
> குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
> நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
> சேவலங் கொடியோன் காப்ப
> வேமம் வைக லெய்தின்ற் றுலகே.

திணை:—பாடாண்டிணை. துறை:—கடவுள் வாழ்த்து.

தாமரை புரையும்—தாமரை மலரை யொக்கும், காமர் சே அடி—யாவருக்கும் விருப்பத்தைத் தருகின்ற அழகிய சிவந்த பாதங்களையும், பவளத்து அன்ன—பவழத்தைப் போன்ற, மேனி திகழ் ஒளி—சரீரத்தினது விளங்கும் பிரகாசமும், குன்றி ஏய்க்கும் உடுக்கை—குன்றி மணியை ஒத்திருக்கும் சிவந்த ஆடையும், குன்றின் நெஞ்சு பக எறிந்த—கிரௌஞ்சம் என்னும் மலையின் நடுவிடம் பிளவுபடும்படி எறியப்பட்ட, அம்சுடர் நெடுவேல்—அழகிய ஒளி பொருந்திய வேலாயுதத்தையுமுடைய, சேவல் அம் கொடியோன் காப்ப—கோழியின் உருவம்தீட்டப்பெற்ற அழகிய கொடியையுடையவனாகிய முருகன் காத்தலால், உலகு ஏமம் வைகல் எய்தின்று—உலகத்தில் வாழும் உயிர்கள் பாதுகாவலை நாளும் பெற்றன.

காமர்—அழகு; குன்றி—குன்றிமணி, உடுக்கை—ஆடை. நெஞ்சு—நடுவிடம். ஏமம்—பாதுகாவல். வைகல்—நாள். பக—பிளக்க.

தாமரை—முதலாகு பெயர்; வடசொல். புரை, ஏய், அன்ன—உவமவுருபிடைச் சொற்கள். காமர்—(காமரு) உரிச்சொல். சேவடி—பண்புத்தொகை. உடுக்கை—தொழிலாகு பெயர்; உடுக்கப்படுவது. குன்றினெஞ்சு—உருபு மயக்கம். காப்ப—வினை எச்சம். உலகு—இடவாகு பெயர். எய்தின்று—எய்திற்று;காலவழுவமைதி. வேல்—வெல்வது; காரணம்பற்றி வந்த பெயர்.

ஏமவைகல்—பிரதிபேதம்.

உலகு என்பது ஈண்டு உலகத்து வாழும் உயிர்ப் பன்மையைக் குறித்து நின்றது.

எய்தின்று என இறந்த காலத்தாற் கூறினர், உலகம் பாதுகாவலை முருகனால் நாளும் எய்துதலின். என்னை?

> "வாராக் காலத்தும் நிகழுங் காலத்து
> மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
> இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
> விரைந்த பொருள என்மனார் புலவர்"—
>
> (தொல்-சொல்-வினை சூ. 44)

என்பாராகலின்.

குன்றின் என்பதில் 'இன்'சாரியையுமாம். எய்தின்று—இதில் இன் சாரியை; இன்-இடைநிலை-இன்னோசை தந்து நின்றது என்பதுமாம். உலகே என்பதில் ஏகாரம். ஈற்றசை. நெடுவேல்—வேலிற்கு நெடுமை என்றும் நிலைத்திருத்தல்.

ஏமவைகல் என்பதற்குப் பாதுகாப்புள் தங்குதலைக் குறித்து நின்றது என்பாருமுண்டு. வைகல் என்பதன் இறுதியில் தொறுப்பொருளாகிய உம்மை தொக்கி நின்றது.

காப்ப என்னும் செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது.

மேற்கோள் விளக்கம்

1. "பன்னிரு படலம், நூற்றந்தாதி, குறுந்தொகை, நெடுந்தொகை என்பன அளவு பற்றிவந்தன."

—(வெண்பாப் பாட்டியல்)

2. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன."

—(இறையனாரகப் பொருள்)

3. "அளவால் தொகுத்த பெயர் பெற்றது துறுந்தோகை."
—(மாறனலங்காரம்)

4. "தாமரை புரையுங்காமர் சேவடி"—என்பது சினைக்குச் சினையே வந்து உவமை ஆயிற்று."
—(தோல்-பொருள்-உவமவியல்-பக். 95)

5. "தாமரை" என முதற் பொருளின் பெயர் சினைப் பொருளுக்காயது.
—(நன்னூல் சங்கரநம—பக். 143)

6. "தாமரை..........உலகே"—"இதனுட் பொழிப் பெதுகையும், ஒரூஉ எதுகையும், ஒரூஉ மோனையும் பிறிதும் வந்தவாயினும் முதல் வந்ததனுலே பெயர் கொடுத்துப் பொழிப்பெதுகைச் செய்யுளென்று வழங்கப்படும்."
—(யாப்பருங்கலம்—பக். 188)

7. "தாமரை புரையுங் காமர் சேவடி," என்ற பாட்டினுள் ஈற்றடி யிரண்டும் மகார வகாரங்கள் எதுகையாய் வந்தன."
—(யாப்பருங்கலம்—பக்.195)

8. "எல்லாக் குற்றமுந் தீர்ந்த செய்யுள் வருமாறு:—"தாமரை ......உலகே;'
—(யாப்பு-காரிகை—பக். 290)

9. "தாமரை புரையும் காமர் சேவடி"—என்பது சினையுணர்த்தின் ஆகுபெயராம்."

10. "தாமரை புரையும் காமர் சேவடி"—என்பது முன்னமின்றி வந்தது.
—(தோல்-பொருள்-செய்—பக். 518)

11. "காமர் சேவடி"—"கடிமலர் புரையும் காமர் சேவடி"
—(யாப்—பக். 189 மேற்கோள்)

12. பவளத்தன்ன மேனித் திகழ் ஒளி,"—"குன்றியேய்க்கு முடுக்கை"—"செய்யன் சிவந்த வாடையன்"
—(திருமுருகாற்றுப்படை- 206)

"உடையும் ஒலியலும் செய்யை மற்றுங்கே,
படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்" —(பரிபாடல்-19-97)

13. 'ஏமம்வைகல்'—"ஏமவைகல் பெறுக யாமெனவே"
—(பரிபாடல்-17-53)

"பவளத் தன்ன மேனித் திகழொளி"—பவளம் செந்நிறம் ஆதலின் முருகவேள் மேனி செந்நிற மானதென்க. இதனை,
"செவ்வேள் சேய்"—(முருகு. 61);
"பொலம் பூட்சேய்"—(முருகு 271)
என்பவற்றுலும் "செவ்வேள்" என்னும் பெயருண்மை யானும் அறிக.

"உருவு முருவத்தீ யொத்தி"—(பரி-19-99) என்பதாலும்
"வேல்வல்லானிறனே போல் வெருவந்த சேயும் ஆங்கு"
—(கலி-104-14) என்பதாலும் அறிக.

(தொடரும்)

அறிவியற் பகுதி – Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்ரமணியம், எம். ஏ.]

மெய்ப்பாட்டியல் (Emotions)

மெய்ப்பாடு என்பது ஒருவனது உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சிகள், அங்கு நிகழ்ந்தவாறே, புறத்தார்க்குப் புலப்படுவதோர் வழியால் வெளிப்படுதலாம். இதனை, வீரசோழிய உரைகாரர் "மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்" என்பர். ஒல்காப்புகழ்த் தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை எண்வகையாக வகுத்தனர். அவை, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. மேல்நாட்டு உளநூற் புலவர் மேலும் பலவகை மொழிவர். ஆயினும் அவை யெல்லாம் இவ்வெட்டினுள் அடங்குவன என்பதொருதலை.

உள்ளத்தே நிகழும் உணர்ச்சிகளாகிய நிகழ்ச்சிகள், முக மாற்றத்தாலும், மற்ற உறுப்புக்களின் நிலைவேறுபாட்டாலும், புறத்தார்க்குப் புலனும். எனவே, அவைகள் மெய்ப்பாடுகள் எனப்பட்டன. ஆங்கிலத்தில் அவை இமோஷன்ஸ் (Emotions) எனப்பட்டன. புறத்தார்க்குப் புலனுகாது, நுகர்வான் ஒருவனுக்கே புலனும் உள்ள உணர்ச்சிகளும் உள. அவைகளை நுண்ணுணர்ச்சிகள் எனக் கூறலாம். ஆங்கிலத்தில் அவை பீலிங்ஸ் (Feelings) எனப்பட்டன.

பொது வியல்பு

மெய்ப்பாட்டின் தன்மையைப்பற்றி மூவேறு கொள்கைகளை உளநூற் புலவர் கொண்டிருக்கின்றனர்.

(1) உடலின் உள் உறுப்புக்களில் உண்டாகும் நிலை வேறுபாட்டால், அல்லது ஒருவகை நெகிழ்ச்சியால், ஏற்படும் உணர்ச்சிதான் மெய்ப்பாடாகும் என்பது ஒரு கொள்கை.

(2) முன்னர் நுகர்ந்த இன்பங்களையும் துன்பங்களையும் தொடர்புபற்றி மீண்டும் நினைத்தலால் ஏற்படும் உணர்ச்சியே

மெய்ப்பாடெனப்படுவது என்பது மற்றொரு கொள்கை.

(3) உணர்ச்சிகளை வெளிப்பட புலப்படுத்துவதாகிய உறுப்புக்களின் அசைவு முதலிய செய்கைகளே மெய்ப்பாடுகளாம் என்பது பிறிதொரு கொள்கை.

இம்மூன்று கொள்கைகளையும் விடுத்து, எடுத்துக்காட்டுகளால் மெய்ப்பாட்டின் தன்மையை ஆராய்வோம்.

(1) பரந்த தன்மை:—மெய்ப்பாடு ஒரு குறிப்பிட்ட இனத்திற்கே உரியதன்று: எல்லா இனங்கட்கும் உரியது. ஓரறிவு படைத்த மாக்கள் தொடங்கி ஆறறிவு படைத்த மக்கள் இறுதியாக உள்ள பல இனங்கட்கும் மெய்ப்பாடு உரித்து. பூனையும் தன் குட்டியைத் துன்புறுத்துவார்பால் சினங்கொள்ளும். குழவியும் தன் விளையாட்டுக் கருவிகளைக் கவர்ந்து கொண்டார்பால் கோபமுறும். "குணமென்னும் குன்றேறி நின்றா"ரும் மடைமையுள்ள மக்கள்பால் பெருஞ் சீற்றம் கொள்வர். அவ்வாறே அச்சம், உவகை முதலிய பிறமெய்ப்பாடுகளும் எல்லா இனங்கட்கும் உரியன. எனவே, மெய்ப்பாடு பரந்த தன்மையை யுடையது என்பது புலனாகின்றது.

(2) பன்மைச் சார்பு:—ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடு பல வகைச் சார்புகளாலும் எழும் எடுத்துக்காட்டாக, சினம் அச்சத்தாலும் எழும், பெரும் வன்மை யுடைமையாலும் எழும், பொறாமையாலும் எழும், பிற சார்புகளாலும் எழும். ஒரு நாய்க்குப் பல சார்புகளால் கோபம் உண்டாக்கலாம். எலும்பைக் கடித்துத் தின்னும்பொழுது, அதற்கு இடையூறு செய்தாலும், அதன் வாலைப்பற்றி இழுத்தாலும், அதன் குட்டிகளைத் துன்புறுத்தினாலும், நாய்க்குக் கோபம் உண்டாகும்.

(3) முன்னிலைமைத் தொடர்பு:—ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடு தோன்றுவதற்கும், அதன் வன்மைக்கும் சிறந்த சார்பாகவுள்ளது, உள்ளத்தின் முன்னிலைமையேயாகும். விளையாட்டுக் கருவியைக் கவர்ந்து கொண்டவர்பால் குழவிக்குச் சினம் எழுவது, அக்குழவிக்கு விளையாட்டின்மேல் உள்ள விருப்பத்தாலேயாம். அவ்வாறே, எலும்பின்மேலுள்ள விருப்பத்தால், அதைப் பிடுங்கினவர்பால் நாய் கோபம் கொள்கின்றது. ஒரு தீய விலங்கைக் கண்டு அச்சம் என்னும் மெய்ப்பாட்டினை யடை

கின்றவன், உயிரிச்சை என்னும் முன்னிலைமைச் சார்பாகவே அம்மெய்ப்பாட்டினை அடைகின்றான். தான் விரும்பியிருந்த கூட்டுறவு இன்பத்துக்குத் தடையாக விருப்பதால்தான் ஒரு சேங்கன்று மற்றொரு சேங்கன்றிடத்தும் கோபம் என்னும் மெய்ப்பாட்டினை அடைகின்றது.

(4) மெய்ப்பாட்டுப் பின்னிலையல்:—இது ஆங்கிலத்தில் இமோஷனல் மூட் (Emotional Mood) என்று கூறப்படும். மெய்ப்பாட்டின் தோற்றத்துக்குரிய நிலைமை நீங்கின பிறகும், அம்மெய்ப்பாட்டின் தன்மை, உள்ளத்தின்கண் சிலகாலம் ஆழ்ந்து நிற்கும். இதுவே மெய்ப்பாட்டுப் பின்னிலையல் எனப்படும். வீட்டில் மனையாளுடன் சினம்கொண்ட ஆசிரியர், பள்ளியில் மாணவர்கள் மேலும் சினங்காட்டுவதும், தலைவனால் கண்டிக்கப்பட்டு வீடு சென்ற வேலையாள் தன் மனைவி மக்களிடத்தே கோபம் கொள்ளுவதும், சில எடுத்துக்காட்டுக்களாம்.

மெய்ப்பாடுகளும் உறுப்பசைவுகளும

Emotions and Expressive Movements

நகையாலும் விளையாட்டாலும் ஒரு குழவி இன்பமாயிருத்தலை அறியலாம். வாலாட்டத்தால் நாய் இன்பமாயிருத்தலையறியலாம். மனிதனுடைய முகத்தாலும் குரலாலும் அவனுடைய மெய்ப்பாட்டின் தன்மையை அறியலாம். புன்னகை, பெருநகை, கைக்கொட்டல், உரத்துப் பேசல், தேம்பிப்பேசல், அலறல், வீறிட்டுக்கூவல், குதித்துப் பேசல் முதலிய செய்கைகள் மெய்ப்பாட்டின் அறிகுறிகள். சில உளநூற் புலவர்கள் இச்செய்கைகள் யாவும் விலங்குப் பிறப்பிலிருந்து மனிதப்பிறப்பு ஏற்பட்ட காலத்து உடன்தொடர்ந்தவை என்பர். எடுத்துக்காட்டாக, இதழ்களை விரித்துப் பற்களைக் கடித்தல் இன்றளவும் மனிதனுடைய கோபக் குறியாக விருக்கின்றது. இது, புலி, சிங்கம், நாய், முதலிய விலங்குகளின் கோபக்குறியை ஒத்திருத்தலை நாம் கண்கூடாக அறிவோம். "வேண்டாம்", "இல்லை" என விடை கூற விரும்புவான் ஒருவன் தன் தலையை ஒரு புறத்திருந்து மறுபுறம் அசைத்தல் குழவிப் பருவத்திருந்து தொடர்ந்து வந்திருக்கின்றது. பேச அறியாத குழவி தனக்கு வேண்

டாத உணவை உட்கொள்ள மறுத்தற்குத் தலையை அசைக்கின்றது. அவ் வழக்கம் ஆண்டு பலவாயினும் நீங்காமல் தொடர்ந்தே நிற்கின்றது. வெறுப்புக் குறிப்பைக் காட்டுவதற்கு நாம் மூக்கால் "ங்ஹூ, ங்ஹூ" என்பது வழக்கம். முதன் முதலில் இச்செய்கை தீய நாற்றம் மூக்குள் புகாமற் காத்தற்கு ஏற்பட்டுப் பிறகு வெறுப்பினை உணர்த்தும் அறிகுறி ஆயிற்று. மனிதனுக்கு வயது ஏற ஏற மெய்ப்பாடுகளைப் புறத்தார்க்குப் புலனாகா வண்ணம் அடக்கும் வன்மையும் வளர்கின்றது. சிறப்பாக, கோபம், அச்சம், வெறுப்பு முதலிய தீய பயன்தரும் மெய்ப்பாடுகளை, மனிதன் தன்னலத்திற்காகவே, வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டிய நிலைமையில் நிற்கின்றான்.

மனிதனுடைய முகக் குறிப்பால், நாம் நற்பயனுடைய மெய்ப்பாடுகளை அறிவதைவிட தீப்பயனுடைய மெய்ப்பாடுகளை மிக எளிதில் அறியலாம். துன்பச் சார்பான மெய்ப்பாடுகள் மனிதனுடைய அடக்கும் ஆற்றலை மீறி அவன் முகக் குறிப்பில் புலனாகின்றன. **"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்"** என்னும் பழமொழியும், **"நெஞ்சம் இனித்தது காட்டும் முகம்"** என்னாமல் **"நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்"** என்றே குறிப்பிட்டமை ஊன்றி உன்னற்பாலது. நம் பழந் தமிழறிஞர் உளநூற் புலமையை எத்துணை பெற்றிருந்தனர் என்பது இதனாற் புலனாகின்றது.

மெய்ப்பாடும் குரல் மாற்றமும்
Vocal expression of Emotion

முகக் குறிப்பால் மெய்ப்பாடுகளை அறிவதைவிட குரற் குறிப்பால் அவைகளை அறிதல் மிகவும் எளிது. நாடகத்தில், நடிகர்களுடைய மெய்ப்பாடுகளை அவர்களுடைய முகக் குறிப்பால் அறிவதைவிட குரற் குறிப்பால் எளிதாக அறிகின்றோம். பாடுங் குரலால் அறிவதைவிட, பேசுங்குரலால் மிக எளிதாக மெய்ப்பாடுகளை அறியலாம். பாடும்பொழுது, இசை விரவியிருத்தலால், நாம் மெய்ப்பாடுகளை எளிதில் பிரித்துப் புலப்படுத்தவும் உணரவும் இயல்வதில்லை. ஆனால் பேசும்பொழுது, கோபத்துடன் வினவல், கோபத்துடன் விடைகூறல், இரக்கத்

துடன் மொழிதல், துன்பத்துடன் பேசல், வெறுப்புடன் புகலல், மனவன்மையுடன் முடிவு கூறல், ஏளனமாக மொழிதல், அன்புடன் சொல்லாடல் முதலிய பலவேறு நுணுக்கங்களைக் கொண்ட மெய்ப்பாடுகளை நாம் அறியலாம். "இல்லை" என்னும் சொல்லைக் கூறுமிடத்து இன்பத்துடனாதல், அன்புடனாதல், வெறுப்புடனாதல், சீற்றத்துடனாதல்; துன்பத்துடனாதல், இரக்கத்துடனாதல் கூறலாம். இவ்வின்பம், அன்பு, வெறுப்பு, சீற்றம், துன்பம், இரக்கம் என்னும் மெய்ப்பாடுகளை நாம் குரலின் உரத்தாலும், நயத்தாலும், இடைப்பட்ட பல குரல் மாற்றங்களாலும் மிக எளிதாக அறியலாம்.

ஒன்றற்கொன்று தொடர்புள்ள மெய்ப்பாடுகள்
The Interconnections of the Emotions

இன்பம், வருத்தம், சினம், அச்சம் என்னும் நான்கு மெய்ப்பாடுகளும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளவை என்பது சில உளநூற் புலவருடைய கொள்கை. இன்பமும் சினமும் ஊக்கத்தை அளிக்கும் மெய்ப்பாடுகள் என்பதும், வருத்தமும் அச்சமும் சோர்வினைத் தரும் மெய்ப்பாடுகள் என்பதும் சிலருடைய கொள்கை. அச்சத்தால் சினம் உண்டாதலும், சினத்தால் அச்சம் உண்டாதலும் உண்டு. உடல்வன்மையுடையவனைப் பகைக்கும் உடல் நலிந்தவன் ஒருவன் முதற்கண் அச்சங்கொண்டு, பிறகு சினங் கொள்வது நாம் அறிந்ததே. "சினம் அளவுக்கு மிஞ்சினால் என்ன தகாத காரியத்தைச் செய்து விடுவோமோ!" என்று அச்சங்கொள்ளும் மக்களையும் நாம் அறிவோம். நாய்க்கு அஞ்சும் பூனை, அச்சம் அளவுக்கு மிஞ்சினால் மிகுந்த சினங்கொண்டு நாயின்மேற் பாய்வதும் நாம் அறிந்ததே.

மெய்ப்பாட்டைப்பற்றிய ஒரு கொள்கை.

மெய்ப்பாட்டைப் பற்றிச் சில உளநூற் புலவர் கொண்டுள்ள கொள்கையை ஒரு எடுத்துக்காட்டைக்கொண்டு ஆராய்வோம். ஒருவன் தனிவழியாகச் செல்லும்பொழுது ஒரு வேங்கையைக் கண்ணுறுகின்றான். உடனே ஓடி ஒளித்துக் கொள்கின்றான். அவன் ஓடத் தொடங்கினபிறகே அச்சங்கொள்கின்றான் என்பது சிலருடைய கொள்கை. ஆனால் உளநூல் வல்

லாருள் பெரும் பகுதியாருடைய கொள்கை, அச்சங்கொண்ட பிறகே ஓடுகின்றான் என்பது. இவ்விரண்டனுள் பின்னர்க் கூறப்பட்டதே நேர்மையான கொள்கையாம். அம்மனிதன் ஓடாவிட்டால் அவன் அஞ்சுகின்றான் என்பது புலனாகாது; அன்றியும், அவன் அஞ்சாவிட்டால் ஓடவேண்டியதில்லை; எனவே ஓட்டமும் அச்சமும் தொடர்புடையவை; எனவே ஓட்டமே அச்சம், அச்சமே ஓட்டம்; என்பர் மேற்குறிப்பிட்ட கொள்கையர். இது தொடர்புள்ள இரு பொருள்களை ஒருபொருளாக மயங்கும் குற்றமாம். மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டில், வேங்கையைக் கண்டவுடன், அம்மனிதன் தன் உயிருக்கு நேரும் கெடுதியை உணர்ந்து அச்சம்கொண்டு மேலும் வாழவேண்டும் என்னும் விருப்பினை உடையனாதலின், ஓடி ஒளித்துக்கொள்கின்றான். உயிரிச்சை என்னும் உள்ளத்தின் முன்னிலைமையால், வேங்கையைக் கண்டவுடன் அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றுகின்றது என்பதுதான் உண்மையான முடிபு.

பொருணூல்—(Economics)

[திரு. B. நடராஜ பிள்ளை B.A. (Hons)]

(முன் ௪௨௫-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுதிருந்த சென்னை அரசாங்க அதிகாரிகள் ஏராளமான நிதி இந்தியாவைவிட்டு வெளியேறுவதன் தீமைகளை நன்கு உணர்ந்திருந்தனர். நாணயங்கள் மிகுதியாக வெளியேறுவதே அகவிலைகள் குறைவதற்கு முக்கிய காரணமென்று சில ஜில்லா கலெக்டர்களும் ரெவன்யூ போர்டு அதிகாரிகளும் 1830-ல் அபிப்பிராயப்படவே, சென்னை அரசாங்கம் அக்கொள்கையினைக் குறித்துப் பின் வருமாறு எழுதியது.—

"இந்த நாட்டுக்கும் பிரிட்டனுக்குமுள்ள அரசியல் தொடர்பாலும், அயல் நாட்டோடுடைய வாணிபத்தாலும் தங்கமும் வெள்ளியும் வெளிச் செல்லுவதையும், அவ்வாறு வெளிச் செல்வதால் போதிய கைத்தொழிலோ வாணிபமோ இல்லா ஒரு நாட்டுக்கு உண்டாம் இடும்பையையும் இன்னல்களையும் பற்றி போர்டார் கொண்டுள்ள கருத்துக்களை மாட்சிமை தங்கிய கவர்னரும் அவர் சபை அங்கத்தினரும் நன்கே அறிகுவர். ஆனால் மத்திய அரசாங்கமும் இம்மாகாண அரசாங்கமும் தற்பொழுது கவனிக்க வேண்டிய நிலையிலிருப்பது எதைப்பற்றி என்றால், இங்கு கஜானாக்களிற் தங்கமும் வெள்ளியும் இருக்கும்போது கம்பெனியார் அவை இல்லாது தாய் நாட்டில் கஷ்டப்படவேண்டுமா என்பதேயாகும். ஆகையால் நம்மால் இயன்றவரை இக்கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முயலவேண்டுமெனினும், இம்மாதிரி அடிக்கடி இங்கிருந்து தொகைகள் கேட்கும் பழக்கத்தை இனிமேல் கண்டிப்பதோடு, இவ்வாறு தங்கம் வெளிச் செல்லுவதால் நாட்டுக்கு விளைந்த பண முட்டுப்பாட்டையும் நாணயக் குறைவையும் நிவர்த்திபண்ண வேறு எவ்வெவ் வழிகளெல்லாம் உளவோ அவை அனைத்தையும் கையாடுவதும் அவசியமாகும்."

1830 முதல் 40 வரை ஏராளமான திரவியம் நாட்டைவிட்டு அகன்றதென கம்பெனியின் இங்கிலாந்து தலைவர்களே ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு நிதியானது வெளியேறி நாட்டைக் காலியாக்கியதை வறிதாக்கியவொரு முறையெனப் பல ஆசிரியர்கள் கண்டிக்கின்றனர். ஆனால் அதைப்பற்றிய சிறப்பான விசாரணை ஈண்டு நமக்குத் தேவையில்லை; பல நூறாண்டுகளாக விடாது பொன்னையும் வெள்ளியையும்கொண்ட ஒரு நாடானது பின்னர் சில ஆண்டுகள் தான் கொண்டதில் ஒரு பாகத்தை வெளியேற்றுவதைப்பற்றி பொன்னிற் பற்றுள்ள எந்தப் பொருளாதாரப் பண்டிதருங்கூட அச்சங்கொள்வரென்று நாம் நினைப்பதற்கில்லை. இங்கு நாம் கவனிக்க வேண்டியதெல்லாம், இவ்வாறு வெளியேறிய நிதியால் நாட்டின் நாணயத்திட்டத்துக்கு யாது விளைந்தது என்பதேயாகும். இங்கு மற்றோர் மிக நுட்பமான விஷயம் கவனிக்கப்படுதல் வேண்டும். அதாவது அந்தக் காலத்தில் அனுப்பப்பட்டுவந்த திரவியம் முழுதும் கைப்புழங்கி வந்த நாணயமயமாகவே இருந்ததென்பதாகும். இறக்குமதியான திரவியமும் சிறிதளவாக இருந்த போதிலுங்கூட அதுவும், நாணயங்களாகவே இருந்தன. ஆனால் இவைகள் அயல் நாட்டு நாணயங்களாகையாலே, மீண்டும் கம்பட்ட சாலையிற் புகுந்து உள்நாட்டு நாணயங்களாக மாற்றப்படும் வரை ஆட்சியிற்பெற

மாட்டாதவை ஆயின. அத்தகைய செல்லாக் காசுகளை உள் நாட்டு நாணயங்களாக உருமாற்ற கம்பட்ட சாலையில் எவ்வித கூலியும் வசூலிக்கப்படவில்லையேனும், நாம் எடுத்துக்கொண்ட கால அளவையில் கம்பட்டசாலைக்குள் சுதேசிய உருவைப்பெறச் சென்ற நாணயங்களின் பெறுமானம் ஆண்டுதோறும் குறைந்து கொண்டேதான் வந்தது. அரசாங்கக் கம்பட்டசாலை அதிகாரி யின் அறிக்கைப்புள்ளி விவரங்கள் இதனைத் தெளிவுபடுத்தும்.

1841-42-க்கும், 1849-50க்கும் இடையிலுள்ள காலத்தில் நாணய மடிக்கப்பட்ட சாலைக்குச் சென்ற நிதிக்கட்டி, தகடு முத லியவற்றின் தொகை தகுந்தபடி குறைந்துவிட்டதென்பது விளங்கும். இது 1834-ம் ஆண்டிற்குப் பிறகு வெள்ளிடை மலைபோல் காணப்படும். 1834-ம் ஆண்டுக்கு முன் ஆண்டொன் றுக்குச் சராசரி கம்பட்ட சாலைக்குக் காசடிப்பதற்கெனச் சென்ற பொருளின் தொகை 32½ இலட்சம் ரூபாயாகும். இது மெது வாகக் குறைந்து குறைந்து பெரியவியாபாரக் குழப்பமும் இடி வும் உச்சத்திலிருந்த ஆண்டான 1847-48-ல் 1 இலட்சம் ரூபாய்க்கு வந்துவிட்டது.

எனவே, நாட்டிற் புழங்கிவந்த நாணயம் உள்நாட்டுத் தேவைகளுக்கு வரவரப் போதாமலே வந்துகொண்டிருந்தது. இதனுள் 1830-40-க் கிடையில் சென்னைக் கம்பட்ட சாலையை நிறுத்திவிட்டனர். இது அல்லலை அதிகரித்தது. அப்பொழுது அரசாங்க பணமுடக்கத்தின் காரணத்தை ஆராய்வதற்கு ஸி. ஆர். காட்டன் என்னும் ஒரு அதிகாரியை நியமித்தனர். இவர் மேற்குறித்த கம்பட்டசாலை மூடப்பெற்ற காரணத்தாலேயே மக்களுடைய துன்பம் மிகுந்ததென முடிவு கண்டனர். கம் பெனியின் இங்கிலாந்து அதிகாரிகளால் 1839-ல் மே மாதம் 10-ம் நாளில் விடுக்கப்பட்ட கட்டளைப்படி சென்னைக் கம்பட்ட சாலை மீண்டும் திறக்கப்பட்டதெனினும், மாகாணத்தின் நாணய ஏற்பாட்டில் எவ்வித நல்ல காலமும் பிறக்கவில்லை.

(தொடரும்)

"செல்வி"யைப் போற்றுமின்!
செய்கடனாற்றுமின்!

மாணவர் பகுதி

பயனுள்ள கல்வி

[சுவாமி விபுலாநந்தர் அவர்கள்]

(முன் சகரு-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்குநூல் இதுவென நிச்சயித்துக் கொண்டவழி அதனை நுணுகவாராய்ந்து கற்றல் வேண்டும். பருப்பொருளாக நூறு நூல்களைத் தெளிவுபெறுவண்ணம் உளத்துட்கொள்வதினும் பார்க்க ஒரேயொரு நூலினை நுண்ணிதினாராய்ந்து தெளிவுற அறிந்து கொள்ளுதல் சிறந்த முறையாகும். ஆசிரியனது கருத் தாகிய பொற்றிரள் பல சொல்லிடையே மறைவுற்றுக் கிடக்கும்; மண்ணிடைக் கலந்து கிடக்கும் பொன்னினைப் பிரிக்கும் வகை யால் உருக்கி யொன்று கூட்டும் பொற்கொல்லரைப் போல அறி வென்னுந் தீயினிடையே நூலாசிரியனுடைய சொற்களைப் பெய்து உறுதிப்பொருள் பயக்கும் உண்மை வாசகங்களைப் பிரித்தெடுத்து ஒன்றுகூட்ட வேண்டும். இதுவே பயனுள்ள கல்வி பெற விழைவார் கைக்கொள்ள வேண்டிய முறையாகும். நூலினை எழுத்தெழுத்தாக நோக்கி ஊன்றி யவதானித்து உண்மைப்பொருள் காண்போனே "எழுத்தறிந்த பண்டிதன்" எனப்படுவான். மேனாட்டுப் பல்கலைக் கழகங்களிலே வழங்கப் படும் அதியுயர்ந்த வித்தியாபட்டமும் (Doctor of Letters) இப்பொருண்மையதே. இக்காலத்துப் பரீக்ஷைகளுக்குக் கற் போர் சுருங்கிய காலவெல்லையினுள்ளே பல நூல்களைக் கற்க முயல்வாராதலினால் அன்னார் ஒரு நூலினைத் தானும் தெளிவுற அறிந்து கொள்வதில்லை; அவரது கல்வி நல்லாரவைக்களத்துச் சென்று நிலைபெறுவது மில்லை. எடுத்த நூலினைத் தெளிவுற வாராய்ந்து அறிந்தவனுக்கு அதனிடத்தே யெய்துவதொரு உறுதிப்பாடுண்டு. அத்தகைய உறுதிப்பாடு காரணமாக அவை யஞ்சாமையாகிய சிறந்தகுணம் ஏற்படும். தெளிவில்லாவிடத்து நெஞ்சின்கணெய்துவதொரு கலக்கமுண்டு. மேலும்,

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு"

என்றாராகலின், பிறர்வாய்க் கேட்குஞ் சொற்களின் நுண்ணிய பொருள் காணவரிதாயினும் அதனைக் காண வல்லதே அறிவு என்றறிதல் வேண்டும்.

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று"

என்புழியும் நுணுகி நோக்கியாராய்தல் அறிவிற்கு மாட்சிமையைத் தருவதென்பது பெறப்பட்டது.

உளப்பயிற்சிக்குச் சாதனமாகக் கட்புலனையுஞ் செவிப் புலனையுங் கூர்ந் தவதானிக்கு முறையிற் பயிற்றுதல் வேண்டும். கண்ணிருந்துங் காணாத மாந்தர் பலருளர்; செவி யிருந்துங் கேளாத மாந்தர் பலருளர். பகற் கனவு காணும் நிலையிலே என்றும் உண்ணோக்கிய சிந்தையோடு புறத்தே நிகழ்பவற்றைக் கருதாதிருப்பது யோக சாதனை யென்றும் வேதாந்த நிஷ்டை யென்றுஞ் சிலர் தவறாக நினைக்கின்றனர். பகற்றூக்கம் யோக மன்று; தூங்காமையே யோகமென்பது யோகநூற் றுணிபு. மூளையிலே சுத்த ரத்தம் செறிந்து கருவி கரணங்களெல்லாம் பூரண விழிப்பு நிலையிலிருக்கும் பொழுது நம்மைச் சூழவிருக்கும் பிரபஞ்சம் என்னும் ஏட்டினைப் படித்து நாம் அறிவினைப்பெறுதல் கூடும். பூதபௌதிகங்களைப்பற்றிய ஆராய்ச்சியே மேனாட்டாருக்கு உயர்நிலையை யளித்த விஞ்ஞான சாஸ்திரமாகும்.

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

என்ற பொய்யா மொழியின் பொருளும் ஈண்டு நுணுக நோக்கியுணரற்பாலது.

கண்ணுஞ் செவியுங் கருவியாக நுண்ணிதின் நோக்க வல்ல மாந்தருக்கு எண்ணின்றிறமனைத்தும் திண்ணிதினெய்தப் பெறுமாதலின் கணிதநூலுணர்ச்சிக்கும் புலன்களைப்பயிற்றுதல் இன்றியமையாத சாதனமாகும்.

கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி
னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே

என ஆசிரியர் தொல்காப்பியனாரும் உரைத்துச் சென்றார். கண்ணினையுஞ் செவியினையும் பயிற்றும் பொருட்டு மாணாக்கருக்கு ஓவியக் கலையையும் இசைக்கலையையும் ஒருசிறிதாவது அறிவுறுத்துதல் நலமாகும்.

எண்ணூலும் இலக்கணநூலும் புவியியல் நூலும் வான் முறைநூலும், பூதபௌதிகநூலும், ஓவியநூலும், இசைநூலும் என்றிவை பதினாறாட்டைப் பிராயம் புகுமுன்னர்க் கற்றற்குரிய கருவிநூல்களாமெனவும் அவற்றைக் கற்குந்திறம் இதுவெனவும் ஆராய்ந்தாம். இனி உடற்பயிர்ச்சியை விசாரிக்கப் புகுமுன் மேற்கூறியநூல்களுள் பள்ளிப் படிப்பிலே கொள்ளற்குரிய

அளவு இதுவென ஒருவாறு வரையறுத்துரைத்து அப்பாற் செல்வாம்.

முதலிலே எண்ணூலை யெடுத்துக் கொள்வாம். கூட்டல் கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்னும் நால்வகைத் தொழிலையும் எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல் என்னும் நால் வகைகளோடு சார்த்தியுணர்த்துதலும், கீழ்வாயெண் (Fractions) பதிற் றுறுப்பெண் (decimals), பொதுவெண் (general terms) என்னுமிவற்றோடு சார்த்தியுணர்த்துதலும், ஒரெண்ணினையே பெருக்குமெண்ணாகவும் பெருக்கப்படுமெண்ணாகவும் வைத்துப் பெருக்குத் தொகை கண்டறிதலாகிய இருமடிப் பெருக்கம் (Squares) இப்பரிசாகிய மும்மடிப் பெருக்கம் (cubes) நான் மடிப்பெருக்கம் என்றின்னவற்றின் இயல்பினை யுணர்த்துதலும், இருமடி மும்மடிப் பெருக்க வெண்களினின்று மூலை யெண் (Roots) ணினைக்காணும் முறைகளை யுணர்த்துதலும், மறைந்த வெண்ணினைக் கண்டறியும் எளிய முறைகளைப் (Simple equation) பயிற்றுதலும், நடுவெண் (average), படியெண், (Ratio), படியெண்ணொப்பு (Proportion), முத்தொகை ஐந்தொகை, நூற்றுறுப்பு (Percentage) வட்டிக்கணக்கு (Interest), நிலவளவை (Elementary Surveying) என்னு மிவற்றை யுணர்த்துதலும் எண்ணின் பாற்படுவன.

எண்ணூல் கடல்போன்று பரந்த நீர்மையது. பதினாறாட்டைப் பிராயத்தான் கற்குந்தரத்த விவையெனக் காட்டப் புகுந்தே மாதலின், அவற்கு இவை யமையுமென எல்லை யிட்டுரைத்தனம்.

இவை தம்மைச் செவ்விதினுணர்ந்த நன்மாணாக்கன் மேல் புலத்தாரும் வடபுலத்தாரும் விரிவுற வுரைத்த பீஜகணிதம் (Algebra) கேத்திரகணிதம் (Geometry), திரிகோணகணிதம் (Trigonometry), கணனகணிதம் (Differential and integral calculus), வானநூற்கணிதம் (Astronomy), இயந்திர கணிதம் (Mechanics), என்னுந்துறைகளுட் டானே புகும் ஆற்றலெய்தப் பெறுவானாதலின், கணித நூற்கு அடிப்படையாகிய பொது விதிகளைக் கருவியாகவும் செய்கையாகவும் உணர்தலே "பயனுள்ள கல்வி"யின் பாற்படுமென்க.

இலக்கண நூல்களுள்ளே ஒல்காப் பெருமையது தொல் காப்பியம்; நன்னூல், சின்னூல், தொன்னூலாதியாம் பின்னூல் களும் பலவுள; பிற்காலத்தார் கத்தியரூபமாக வியற்றிய நூல்களுஞ் சிலவுள. யாதாயினுமொரு நூலினை யெடுத்து அதனைத் தேறத்தெளியப் படித்துணர்வதே அறிவுநிறைவிற்குக்

கருவியாகும். எழுத்திலக்கணமுஞ் சொல்லிக்கணமும் வெண்பா, அகவல், விருத்தம் என்றின்னவற்றின் யாப்பிலக்கணமும் இளமாணவர் ஓதியுணரற்பாலன.

நாலடியார் முதலிய கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டும், எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய மேற்கணக்கு நூல்கள் பதினெட்டும், கீழ்வகுப்பு மாணவருக்கும், பாடஞ் சொல்லு தற்குரிய முறையிலே தொகுக்கப்பட்டனவென எண்ணுதற்கிட முண்டு. கணக்காயராற் பாடஞ்சொல்லப் படுவனவாதலின் இவை கணக்கு என்னுங் குறியீட்டினைப்பெற்றன. கீழ்க்கணக்கு நூல்களில் இருமூன்றும், மேற்கணக்கு நூல்களில் ஒருமூன்றும் இக்காலத்து மாணவர்க்குப்போதியன.

மக்கட்சாதியார் வாழும் இம்மண்ணுலகிலே பல்வேறுய தேயங்களின் இயற்கை வளனும், மலை, கடல், நதியென்றின்ன வற்றினமைப்பும் வெப்பதட்ப நிலைகளும், மழை வீழ்ச்சி, காற்றியக்க மென்றின்னவும், ஐந்திணை நிலப்பாகுபாடும், விளை பொருளும், வாணிகமும, நாவாய், புகைவண்டித் தொட ரென்றிவற்றினால் ஏற்பட்டிருக்கும் போக்குவரவு வசதிகளும், ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா எனநின்ற பெரு நிலப் பரப்புகளின் அரசியல் நிலையும் மக்களது வாழ்க்கையு மென்றின்னவற்றை யெல்லாம் "திரைகடலோடியுந் திரவியந் தேடு" எனும் ஔவையார் வாக்கிற்குப் பேரிலக்காகப் பொருள்புரி நூற்சார்புபற்றி ஓதியுணர்தல் வேண்டும். இனி வரன் முறை நூலினும் தமிழ்நாட்டின் பழமை, பாரதநாட்டின் பூர்வீகம், பாரதத்தையடுத்துள்ள சீனம், மிசிரம், (Egypt) பாரசீகம் என்னும் பழம்பதிகளின் தொன்மை நலம், யவனபுரம், ரோமபுரம் என்னுமிவற்றின் அரசியனெறி, புத்ததேவர், இயேசு நாதர், முகம்மதுநபி என்னும் சமயஸ்தாபகருடைய தோற்றத் தினாலே அவரவர் நாட்டிற்கும் நாகரிக உலகிற்கும் நேர்ந்த நலங்கள், மேனாட்டுக் கடலோட்டிகளுட் சிறந்தோரது வரலாறு; மேற்புலத்து வர்த்தகப் பெருக்கத்திற்குக் காரணங்கள்; ஐரோப் பிய மகாயுத்தப்; உலகினை ஒற்றுமைப்படச் செய்வதற்கு அறிவுடையோர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள்; உலகின் தற் கால நிலை என்றிவற்றை யெல்லாம் உளத்திற்கினிமை பயக்கும் கதையுருவமாக இளஞ்சிறுருக்குப் பயிற்றுதல் வேண்டும். நூறு ஸ்தல புராணங்களைப் பாராயணஞ் செய்துபெறும் பயனினும் பார்க்க, உலகபுராணத்தைப் பாராயணஞ் செய்து பெறும்பயன் பெரிது என்பது நாம் சொல்லாமலேயமையும். "பொருள்புரி நூல்," "உலக புராணம்" என்னும் இரண்டினையும் உதயணன் கற்றிருந்தானெனப் பெருங்கதையினால் அறிகின்றோம்.

பூதபௌதிகங்களின் இடலினை யுணர்த்தும் நூற்றொகு தியை மேனாட்டார் "சையன்ஸ்" என்பார் இச்சொல்லின்நேர் மொழிபெயர்ப்பு "அறிவு நூல்" என்பது. கணிதநூலும் இதன் பாற்படும். வடமொழி வழக்குப்பற்றி "சையன்ஸை" விஞ்ஞான நூல் என்னலாம். விஞ்ஞான நூலின் பல துறைகளில் ஒரு துறை யினை முற்றக்கற்றற்கு ஓர் ஆயுட்காலம் போதாதென்பர். பாரத நாட்டிலே தோன்றி உலகெங்கும் அறிவொளி பரப்பும் ஸ்ரீ சந்திர சேகர வேங்கடராமன், ஸ்ரீ ஜகதீச சந்திரவசு, ஸ்ரீ பிரபுல்ல சந்திரராயர் என்னும் விஞ்ஞான நூலறிஞர் மூவரும ஒவ்வொரு துறையிலே பெருங்கீர்த்தி வாய்ந்தவராவார். விஞ் ஞான நூற்றுறைகளிலே அனைவர்க்கும் இன்றியமையாப்பாகம் "உயிர்நூல்" (Biology)ஆதலின், அதனை இளைஞர்க்கு அறி வுறுத்துதல் பயனுள்ள கல்வியின் பாற்படும். தாவரங்களிலும், விலங்கினங்களிடத்தும், மக்களிடத்தும் தோன்றும் உயிர்ச் சக்தி ஒரு தன்மையதே. பிறப்பதும், உணவுட் கொள்வதும், வளர்ச்சி யடையவதும், இனத்தைப் பெருக்குவதும், கால வெல்லையிலே யிறப்பதும், எல்லா வுயிர்க்குமமைந்த பொது விலக்கணமாகும். "அன்பின் வழிய துயிர்நிலை," என்னும் பொய்யா மொழியின்படி எல்லாஉயிரும் அன்பினால் நிலை பெறுவன; அன்பினால் வளர்ச்சி யெய்துவன. தாவர வுயிர்மீதும் அன்பு செலுத்தினால் அது செவ்விதின் வளர்ந்து, மலர், கனி முதலிய பயனைத்தரும். இவ்வுண்மையை இளைஞர்க் கறிவுறுத்துவது உயிர் நூற்கல்வி யின் முதற்படியாகும். மன்னுயிரனைத்தினையுந் தன்னுயிர்போலக் கருதுகின்ற நற்குணத்தை இளம்பிராயத்திலேயே நிலைபெறச் செய்ய வேண்டும்.

"எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்"

என்றபடி இன்னது செய்யின் இன்னது பயக்கும் என்பதை யறிந்து உடற்காப்பிலே கருத்தாயிருக்கும் வண்ணம் இளைஞ ரைப் பயிற்றுதல் வேண்டும். உடலினை நல்ல கட்டுறுதியுள்ள தாக்குவதற்குப் பிரமசரியம் இன்றியமையாதது. தூயவுணவும், சுத்தக்காற்றும், தேகாப்பியாசமும் இன்றியமையாதன. இவற் றை உடற்பயிற்சியின் கீழ்ப் பின்னரும் கூறுதும். உயிரனைத்தும் ஒன்றினோடொன்று தொடர்புடையன; பிறவுயிரினைக் காப்பதே தன்னுயிரைக் காப்பதற்குச் சிறந்தவுபாயமாகும். உழவுத் தொழில், பசுக்காத்தல் என்னுமிவை ஒரு வருணத்தார்க்குச் சிறந்த தொழிலாகக் கூறப்பட்டிருப்பினும் உயிரினைப் பாதுகாக்கு மார்க்கத்தான் இவை அனைவர்க்கும் பொதுவாயமைந்து நின்றன. இவற்றையெல்லாம் முறையறிந் துணர்த்துதலே உயிர் நூற் பொதுவியலாகும்.

இனி ஓவியநூலும் அவ்வத் தொழிலாளர்க்கே சிறப்புரிமையாவன வெனினும் கட்புலனையும் செவிப்புலனையும் பயிற்றும் நோக்கமாக அவற்றின் ஆரம்பப் பாடங்களை எல்லா இளைஞர்க்கும் அறுவுறுத்துதல் வேண்டும்.

"உள்ளத்துறுதி உடலுறுதிக்கண்ணது" ஆதலின் உடற்பயிற்சி தன்னளவில் நலஞ் செய்வதோடு கூட உளப்பயிற்சிக்கும் சாதனமாகின்றது. மேனாட்டு உடற்பயிற்சி முறைகளினும் பார்க்க நமது நாட்டிற் பண்டுதொட் டிருந்துவருகிற ஹடயோக முறையே சாலச் சிறந்தது. சுவாமி குவலயானந்தர் ஆங்கிலத்தில் வெளியிட்டுவருகிற "யோக மீமாஞ்சை" யென்னும் வெளியீட்டிலே ஆடவர்க்கும் மகளிர்க்கும் இளைஞர்க்கும் பொருத்தமாகிய யோகாசனங்கள் பல வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றை நூலினின்று கற்பதனிலும் பார்க்க ஆசிரியன் முன்னிலையிலே அறிந்து கொள்வது நன்றாகும். சென்ற மூன்று மாதங்களாக இலங்கை ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துச் சிவானந்த வித்தியாலயத்தின் சார்பாக (மட்டக்களப்புக் காத்தான்குடி போஸ்ட், கல்லடியுப்போடையில்) அமைந்துள்ள மாணவரில்லத்திலே இருபத்தைந்து அநாதைப்பிள்ளைகளுக்குச் சில யோகாசனங்களைப் பயிற்றினோம். பயிற்சி ஆரம்பிக்குமுன் சிறுவர்களின் நிறை, உயரம், மார்பின் சுற்றளவு முதலிய விவரங்கள் குறிப்பிடப்பட்டன. மூன்றுமாதம் முற்றிலும் நிறைவுறுமுன் அடைந்த தேர்ச்சி ஹடயோக முறையிலே எமக்குப் பூரண நம்பிக்கையை உண்டாக்கிவிட்டது. மாலை ஐந்து மணியளவில் முக்கால் மணி நேரம் (சனிக்கிழமை யொழிந்த நாட்களிலே) பயிற்சி நடந்து வருகிறது. சிறுவர்கள் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு மணி நேரம் தோட்ட வேலையுஞ் செய்து வருகிறார்கள். தூயவுணவும், சுத்தக்காற்றும், நல்ல நீரும், யோகாசனமும் இச்சிறுவர்க்கு முகப்பொலிவையும் உடலுறுதியையும், உற்சாகத்தையும், கல்வியில் விருப்பையுந் தந்துவிட்டன. பன்னிரண்டாண்டிற்கு உட்பட்டோருக்குப் புஜங்காசனம், அர்த்த சலாபாசனம், தநுராசனம், பச்சிமாதனம், ஹலாசனம், யோக முத்திரை யென்னுமிவை பயிற்றப் படுகின்றன. பன்னீராண்டின் மிக்கோருக்கு இவற்றோடு கூடச் சீர்ஷாசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சலபாசனம், அர்த்தமத்ஸ்யேந்திராசனம், மயூராசனம், சவாசனம் என்னும் ஆசனங்களும், உத்தியான பந்தம், யோக முத்திரை, நௌளிக்கிரியை என்பவும் பழக்கப்பட்டு வருகின்றன. யோகப்பயிற்சிக்குப் பூரண பிரமசரியமும், தூயவுணவும் இன்றியமையாத சாதனங்களாவன. பழப்புளியும் மிளகாயும் யோகப்பயிற்சி செய்வோருக்குப் பொருந்தா நீர்மைய. புளி

புகையிலை, நல்லெண்ணய், மிளகாய் என்னுமிவற்றை யறவே நீக்கிவிடுதல் நன்று. எலுமிச்சம் பழரசம், கறிமிளகு என்னுமிவற்றைப் புளி, மிளகாய்க்குப் பதிலாகக்கொள்ளலாம். மிளகாய் என்பது இந்நாட்டிற்கு இடைப்பட்ட காலத்திலே அந்நியரால் கொண்டுவரப்பட்ட பொருள். இது உடலிலுள்ள வலிமையைக் கெடுத்து உதிரத்தை நீராக்கும் நீர்மையது. கறிமிளகு சிறந்த குணங்களையுடையது. நோய்களைக்கண்டித்து உயிர்க்குறுதி பயக்கும் காய கற்பம் என அறிஞர் இதனைக் கூறுவர். உணவினைக் குறித்த ஆராய்ச்சியும் உடற்பயிற்சிக்குக் கருவியாக இளைஞர்களுக்குப் போதிக்கப்படல் வேண்டும்.

சமயக் கல்வியைக் குறித்து இதுவரையும் ஒன்றுங் கூறிற்றிலேப்; அது தனித்த கட்டுரையாக விரிவுற எழுதற்குரியதாதலின் பயிற்சிபெற்ற உள்ளமும், உடலும் உடையார் அவை தம்மைக் கருவியாகக்கொண்டு செம்மைநெறி நின்று எல்லா நலன்களையும் எய்தற்குரியாரென்னுங் குறிப்பினோடு இக்கட்டுரையை முடிக்கின்றோம். —(தனவணிகன் பொங்கல் மலர்)

அரியன பத்து

1. அறவாழி அந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
   பிறவாழி நீந்த லரிது (௮-குறள்)
2. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
   பசும்புற் றலைகாண் பரிது (௧௬ குறள்)
3. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
   கணமேயுங் காத்த லரிது (௨௯ குறள்)
4. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
   ரற்றார்மற் றாதல் அரிது (௨௪௮ குறள்)
5. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
   தொகுத்தார்க்குந் துய்த்த லரிது (௩௭௭ குறள்)
6. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
   வாயின ராத லரிது (௪௧௯ குறள்)
7. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
   ருறைநிலத்தோ டொட்ட லரிது (௪௯௯ குறள்)
8. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
   மாண்பய னெய்த லரிது (௬௦௬ குறள்)
9. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
   யிகல்வெல்லல் யார்க்கு மரிது (௬௪௭ குறள்)
10. நெருப்பினுள் துஞ்சலு மாகு நிரப்பினுள்
    யாதொன்றுங் கண்பா டரிது (௧௦௪௯ குறள்)

—இ. சிவகுருநாதன்.

ஸெயின்ட் ஆல்பன்ஸ்

உரோமர் ஆதிக்கம்.

இங்கிலாந்தில் ஹெர்ஃபோர்ட்ஷைரிலிருக்கும் பள்ளத்தாக்கிலிருப்பது ஸெயின்ட் ஆல்பன்ஸ் நகரம். அதன்புறத்தே யோடும் வேர் என்ற ஆற்றின்கரையில் பண்டைய உரோமநகரமாகிய வெருலேமியம் என்பதிருந்ததாகக் கருதப்படுகிறது. அவ்விடத்தில் உரோமர்களால் அமைக்கப்பட்ட ஒரு நாடக அரங்கு இப்பொழுது முதன்முதலாகத் தரையின் கீழிருந்து வெட்டியெடுக்கப்பட்டுளது. வெரூலம் பிரபுவின் நன்முயற்சியினாலேயே இவ்வாறு அது வெட்டப்பட்டு உரோமரின் பெருமையை மக்கட்கு என்றென்றுந் தெரிக்கும் காட்சிப்பொருளாக அமைக்கப்படுகிறது.

1800 ஆண்டுகட்குமுன், உரோமர்களின் வெற்றிகுறித்த கூத்துகள் இவ்வரங்கிற்றான் நிகழ்த்தப்பட்டதாகத் தெரிகிறது. இலண்டன் பொருட்காட்சிசாலை அமைச்சர் டாக்டர் ஆர். ஈ. மார்ட்டிமர் வீலர்தான் இதனை வெட்டும்படி ஏற்பாடு செய்தவர். இவ்வாறு ஒரு நாடக அரங்கு இருந்ததென்று 1847-ம ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டிருந்தபோதிலும் இந்நாள்வரை அதை வெட்டி வெளிப்படுத்துதற்கான ஏற்பாடுகள் செய்யவில்லை.

டாக்டர் வீலரின் ஆராய்ச்சியினால் இந்நாடக அரங்கு முழு அமைப்பும் உடையதாய்ச் சிதைவில்லாமல் இருக்கிறதென்றும், பண்டைய கிரேக்க உரோம நாடகசாலை யமைப்புத் திட்டத்திற்கு ஒத்ததாயிருக்கிறதென்றும், அரைநிலா வடிவம் போன்று மக்கள் உட்காரும் இடம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், அரங்கம் உயர்த்தப்பட்ட நிலையில் இருக்கிறதென்றும் தெரிகின்றன.

இங்கிலாந்திலும் பண்டைய உரோம நாகரிகத்தின் அறிகுறிகள் காணக்கிடக்கின்றன என்பதை வலியுறுத்தக்கூடிய பேரமைப்பாக இவ்வரங்கு விளங்கும்.

இன்னும், தோண்டியெடுக்கப்படும் இப்பகுதியின் ஒரு கோடியில் உரோமர் கோவிலொன்றும் இருக்கின்றது. திறந்த மும்முடக்கு வடிவமான ஒரு முற்றத்தில் கோவிலின் பீடம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு ஒரு மண்டபம் மேலே அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், பீடத்தின் பின்புறத்தில் பலியிடப்பட்ட (எருதின்) தலையொன்று புதைக்கப்பட்டுள்ள தென்றும் தெரிகின்றன. பூசனைக்குரிய கலன்களும் விளக்குகளும் பல காணப்படுகின்றன.

இதனால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஸெயின்ட் ஆல்பன்ஸ் நகரம் உரோம நாகரித்தின் அணிகலமாகத் திகழ்ந்ததென்று ஊகிக்கப்படுகிறது. (இந்து)

—கா. சிவ. க.

கவின்கலைப் பகுதி—Fine arts

மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய

மத்த விலாசம்

களிக்கூத்து

[திரு. தி. கு. கி. நாராயணசாமி நாயடு அவர்கள்]

நடாத்துநர்: i சூத்திரதாரன். ii நடி.

நாடக பாத்திரங்கள்

பெயர்	விபரம்	சுருக்கம்
சத்திய சோமன்	கபாலி	கபா
பப்ருகல்பன்	பாசுபதன்	பாசு
நாகசேனன்	புத்த சந்நியாசி	புத்த
தேவசோமா	கபாலிபரத்தை	தேவ
பித்தன்	பைத்தியக்காரன்	பித்த

இடம்:—காஞ்சிபுரத்துப் பல விடங்களில்.

முன்னுரை

சின்மயா காயம் திகழ்தரு கபாலி;
தன் திருக் கூத்தே சாற்று மூவுலகின்
தோற்றமும் காப்பும் துடைத்தலு மென்னச்
சாற்று முத்தொழிலின் தன்மையு மாகும்;
அண்டமெவ் வெவையும் அசைத்திடு சூத்திரம்
பண்டைய உரை, உடை, படிவமும், கூத்தும்,
குணம் எனும் இவைகளே கோதிலா விறைவன்
திருவுள எழுச்சியாற் றீவிரமாக
மருவிய வுயிர்களின் மனவுணர் வனைத்தும்
தாக்குவதுண்மை; தானே யனைத்தும்
நோக்கவும் உரியன்; நுனிப்பரு மவனே
அறிவுறு மறிவும் அவனியில் விரிந்த
நிறைதரு வியாபக நிலையையு மெய்தி
கீர்த்தியும் பெருகிக் கிளர் நிலையடைய
சீர்த்தியால் அவனருள் சேர்வதா குகவே.

கட்டி:—ஆ! இளையாளிடம் யாருக்கும் அன்பு அதிகமிருப்பது இயற்கையே. ஆனால், என் மூத்தாளுக்கு அது பிடிக்கவில்லை. அதுவும் இயற்கைதான். இருப்பினும் அவள் ஊடலைத் தணிக்க இப்பொழுது தக்க தருணம் வாய்த்துளது. அவளைப் போய்ப் பார்ப்போம்.

(அரங்கின் உள்ளே நோக்கி) பெண்ணே! இப்படி வா.

(நடி வருகிறாள்)

நடி:—(சினந்து) என்ன இன்று இளமை திரும்பி குணபாரத்தால் மத்த விலாசனாய் என்னைக் களிக்கூத்தாட அழைக்கிறீரா?

கட்டி:—ஆமாம். பெண்ணே! அப்படித் தான்.

நடி:—அப்படியானால் அவளுடன் ஆடலாமே, உம்முடைய ஆசை நாயகியுடன்.

கட்டி:—நான் உன்னுடன் ஆடவேண்டு மென்றுதான் எனக்குக் கட்டளை.

நடி:—உம், இளையாளின் கட்டளையா?

கட்டி:—அப்படித்தான் வைத்துக்கொள்வோமே. நீ நடிப்பதால் அவையினரின் நன்மதிப்புப் பெறுவாய்.

நடி:—அது உன்னுடைய நோக்கம்.

கட்டி:—உண்மைதான், பெண்ணே! நீ அடையும் நன்மதிப்பு என்னைச் சார்ந்தே.

நடி:—(உவகை பூத்து) அப்படியானால் இங்குக் குழுமியிருக்கும் விழுமியோரின் அருள் எனக்குக் கிட்டி விட்டதா?

கட்டி:—அதிலென்ன ஐயம். நீ அவர்தம் அருள் அனைத்தும் பெற்றாய்.

நடி:—இந்த நற்செய்தியைச் சேர்த்தமைக்கு என்ன கைம்மாறு செய்யவல்லேன்?

கட்டி:—எனக்குக் கைம்மாறும் வேண்டுமோ? என் அன்பே! உன்

பங்கய மலர்முகத்தின் பளிங்கொளி நகையைக்கண்டும்,
துங்கிய புருவவில்லும் சுழித்தெழக்கண்ட பின்னும்,
மங்கையே! எந்தனுக்கு மற்றுள பரி செதற்கு?
தங்கையில் வெண்ணெய்வைத்து நெய்க்கழுவார்கள் போல.

நடி:—ஐயனே! இப்பொழுது எதை நடிக்கப்போகிறீர்?

கட்டி:—ஏன்! நீதான் சற்று முன்பு சாற்றினாயே; மத்தவிலாச நகைச்சுவை நாடகத்தைத்தான்.

நடி:—நான் கோபத்தில் சொன்னது உண்மையாய் விட்டது! நல்லது இருக்கட்டும். நாடகத்தை இயற்றிய நாவலன் யாரோ?

கட்டி:—சொல்வேன் கேளாய். பாவாய்! அவன் ஒரு விழுமிய மன்னர் மன்னன். அரும்பெரும்பகைவரை அடர்த்தவன். தன் குடிகளைப் பாராட்டுவதில் பஞ்ச பூதத்தை ஒத்தவன். சிம்மவிஷ்ணு வர்மன் பெற்றெடுத்த கான்முளை; மகேந்திர விக்கிர வர்மன் என்னும் பெயரான். பல்லவகுல நடுநாயகம். ஆட்சி முறையில் ஆற்றல் சால் வேந்தன். இந்திரர்க்கு நிகரான ஆக்கமும் ஆற்றலுமுடையோன்; கொடைவன்மையில் குபேரனே எனின் மிகையாகாது.

நடி:—பின் என் ஐயா தாமதம்? இது ஒரு புதிய நாடகமாயிருத்தலின் விரைவில் நடத்துதல் நலமாகும்.

கட்டி:—ஆம்; இசையே என் ஆக்கம் (உள்ளே இருந்து) "தேவ சோமா! என் கண்ணே!" அதோ கையில் கபாலத்தோடு தன் பரத்தையின் கைபற்றி நடந்து வரும் துறவியின் உள்ளம் கள்ளால் களிப்பதுபோல் என் உள்ளம் நாடகக் கவியின் குணாதிசயங்களைக் கூறக்கூறக் குளிர்ந்தது. [போதல்]

முதற் களம்

பொய்ம்மையார் கலியிற் புகலிட மின்றிச்
செம்மையார் அறிவும், சிந்தையில் ஈகை
இரக்கம், தகைமை, எழில்,உயர் கலைத்திறன்
பெருக்குமுட் டூய்மை, பிழைபடா வாய்மை
துணையிலா வலிமை தோமறு வணக்கம்
இணையிலா இவனை இருப்பிட மாகக்
கொண்டன வன்றிபு மண்டல மனைத்தும்
ஐம்பூதங் களால் ஆகிய தன்மைபோல் 8
இம்பர் நற்குணங்கள் இவனுரு வாயதால்
ஆழ்சுரங் கத்தில் அவிர்தரும் பல்வகை
வீழ்மணிக் குலங்கள் மிளிர்வது போல 11
நவநவ மான உவமைதீர் வழக்கில்
கவிச்சுவைப் புலவர் காதலித் தேற்கும்
பெருவிருந் தாகப் பெட்புறு மொழிகள்
நகைச்சுவை ததும்ப நவில்திறமுடையோன்.

கபா:—[தன் பரத்தையான தேவசோமாவுடன் வருகிறான்; குடிவெறியில்] தேவ சோமா!—என் அன்பே! உண்மைதான்— செய்த தவப்பயனால்தான் வேண்டியாங்கு வேண்டிய வேடம் ஏற்கலாமென்ற உண்மை உன்னிடத்தில் கண்டேன். நீ பரமவிரதம் அனுட்டித்தவளாகையால் கண்ணிமைப் பொழுதில் உன் உருமாறி ஒப்பற்ற அழகி ஆனாய்.

தேவ:—என் ஐயா! நீ சொல்ரது பாத்தா நான் குடித்திருக்கிறாப்பில இருக்கே.

கபா:—என்ன சொல்லுகின்றாய்? என் கண்ணாட்டி!

தேவ:—என்ன சொல்ரன். நான் ஒண்ணு சொல்லலியே.

காப:—அப்படியானால் நான் குடித்திருக்கிறேனோ?

தேவ:—ஐயா! தரை கிரு-கிரு-கிரு கிருண்ணு சுத்துது. ஐயோ! நான் கீழே பொத்துனு விழப்போரேன். என்னைப்பிடிச்சுகோயெ.

கபா:—இதோ என் கண்ணே! (அவளைப் பிடிக்கப்போய்த் தானும் தடுமாறிக் கீழே விழுகிறான்) என்ன சோமதேவி! என் மேல் உனக்குக் கோபமா? நான் உன்னைப் பிடிக்கவரும்பொழுது நீ சரேலென்று ஒதுங்கிவிட்டாயே.

தேவ:—ஆம்-ஆம் சோமதேவிக்கு ஒங்மேலே சலிப்புத் தான். நீ அவள் காலில் போய் விழுந்து என்னை மன்னீ இண்ணு சொன்னாலும், அவ உன்கிட்ட வரமாட்டேங்கிறா.

கபா—நீ சோமதேவி அல்லவா? (நிதானித்து) இல்லை இல்லை. தேவசோமோ.

தேவ:—சோமதேவி - உன்னுட செல்வக் கொழுந்தெ. அதனாலே உனக்கு என் பேர் சரியாகூட சொல்லமுடியலே.

கபா:—என் குடிவெறியில் ஏதேதோ உளறிக்கொட்டி உன் மனதைப் புண்படுத்தி னேன். இக்குடி என்னைக் கெடுத்து பாதாளத்தில் தள்ளிவிட்டது. சரி, சரி. இன்று தொட்டு இனிமேல் இக்கொடிய குடியைக் கையால் தொடுவதே யில்லை. இது உறுதி.

தேவ:—ஓ! ஐயா! ஐயா! இது என்ன இது. உங்க சந்நியாசத்தை இந்தசபதத்தால் கெடுக்காதிங்க. எனக்காகவாவது நீங்க அதை விடக்கூடாது. (தேவசோமா கபாலி காலில் விழுகிறாள்.)

காப:—(உவகையோடு அவளைத் தூக்கி அணைத்து) த்றிர்ண! த்றிர்ண! த்றிர்ண! என் பிரியே! சிவனைப் பணிவோம்.

தேவ:—ஓ! ஐயா! இதென்ன பேச்சு! இத்தானா மோச்சத்துக்கு வழி? ஆருகதர் வேறு தினுசா சொல்ராங்களே.

கபா:—ஆமாம் பெண்ணே! ஆனால் அவர்கள் நாஸ்திகர்.

தேவ:—பாபம் சாந்தியாகட்டும்.

கபா:—பாபசாந்தி! உண்மையாய் அப்பாவிகளின் பெயரை நிந்தனையிலும் நாவால் நவிலலாகாது. பெரும் பாதகர்கள். பிரமசரிய நோன்பு நோற்று உடலை வருத்துபவர்கள். தலை மயிரை அழிப்போர். மாசு பிறக்கியமேனியர்கள். துவராடை மூடிய மெய்யினர்கள். இந்நாத்திகர் பேச்சுப்பேசி என் நாவும் நாற்றமெடுத்தது. நான் அதைக் கழுவிப் பரிசுத்தமாக்கவேண்டும்.

தேவ:—அப்படியானால் வா இன்னொரு கடைக்குப் போவோம்.

தேவ:—அப்படியே போவோம். பெண்ணே! (போதல்)

முதற்களம் முற்றும்

ஆராய்ச்சிப் பகுதி-Research

புராணங்கள் உண்மை வரலாறுகளா?

கல்கத்தா பல்கலைக் கழக உளநூலாசிரியர்

[டாக்டர் ஜி. போஸ்].

புராணங்களெல்லாம் கட்டுக்கதைகள், வெறுங் கதைகள் என்ற கருத்து மேனாட்டறிஞர் பலர்பாட்டு இருந்து வருகிறது. புராணங்களில் ஒன்றிரண்டு உண்மை வரன்முறைக்குறிப்புகள் இருக்கக் கூடுமாயினும் அவையெல்லாம் உருத்தெரியாதபடி திரிபுபடுத்தப்பட்டுள்ளன வாதலால் அவற்றை நம்பி ஒரு நாட்டு வரன்முறையையோ மக்கள் வரன்முறையையோ கால வரையறையையோ கணித்தல் கூடாதென்று கொள்ளப்படுகிறது. ஆராயுங்கால் இக்கருத்துகள் பிழைபட்டன என்று புலனாகின்றது. புராணங்களில் மிகைபடக் கூறப்பட்டதாகக் கருதப்படுபவைகளும், பொருளற்றவைகளாகத் தோற்றுபவைகளும் புராண இலக்கண முறைப்படி ஓர்ந்து சிந்தித்து வேண்டுமென்றே எழுதப்பட்டுள்ளன என்பதும், குறித்த ஒருபயன் கருதியே அவ்வாறு அவைகள் எழுதப்பட்டுள்ளன என்பதும் அறிதற்பாலன. எனவே, அவ்விலக்கண முறைப்படி பொருள் காணுங்கால் புராணங்கள் உண்மை வரலாறுகளே என்பது புலனாம்.

புராணங்கள், நுதலும் பொருள் இன்னதென வரையறுத்துக் கொண்டு அப்பொருளை விரித்துக்கூறுங்கால் ஐந்து கூறுபடுத்திக் கூறுவதென்ற இலக்கணமமைந்தன. அந்த ஐந்து கூறுபாட்டுகளையும் ஆராய்ந்து பார்த்தால், புராணங்கள் உண்மை வரலாற்று நூல்களாக அமைந்திருத்தல் வேண்டுமென்ற கருத்துடனேயே எழுதப்பட்டன என்பது தெளிவாகும். மங்வந்தரங்கள் என்று புராணங்களில் கணக்கிடப்படுவன காலவரையறையைக் குறிப்பனவேயாகும். மன்னர்கள், தலைவர்கள், வீரர்கள் முதலியோர் காலவரையறையைப் புராணங்கள் கணக்கிட்டுக் கூறுவதை ஒவ்வொரு புராணத்திலுமுள்ள மங்வந்தர அத்தியாயத்திற் காணலாம். இதுவே பண்டையோர் இந்திய வரலாறுகளைக் குறித்து வைத்த முறையாகும். பன்னூறாயிரம் ஆண்டுகள் கொண்ட ஒரு காலவரையறையை "யுகம்" என்று பெயர் கொடுத்துக் கூறிவந்தனர். இக்காலவட்டக் கணக்கு உலகத் தோற்ற காலமுதல் முடிவு காலம்வரை கணக்கிடுவான் வகுத்துக்கொண்டதாகும். தற்கால அறிவியல் வல்லுநர்கள் வகுத்துக்

கூறும் கற்காலங்களுடன் இவ் "யுகங்களை" ஒப்பிடலாம். உலகியல் நிகழ்ச்சிகளைக் கணக்கிட்டுக்கூறும் எளிமை கருதி ஐயாயிரம் ஆண்டுகள் கொண்டதை ஒரு வட்டமாகக் கூறிவந்தனர். இவ் வட்டத்தைப் பதினன்கு உள்வட்டங்களாக ஒருவகையும், முப்பது உள்வட்டங்களாக ஒருவகையும் ஆக இருவகையாகப் பிரித்துக் கணக்கிட்டனர். 357 ஆண்டுகள் கொண்டது பதினன்கின்படி கணக்கிட்ட ஒரு உள்வட்டம். இரண்டாயிரம் திங்கள்கள் (மாதம்) கொண்டது முப்பதின்படி வகுத்த ஒரு உள்வட்டம். இவ்வட்டங்கள், உள்வட்டங்களின் கணக்குப்படியே "யுகங்கள்" வகுத்துக் கூறப்பட்டுவந்தன. மாந்தாதா என்பவர் 15 வது யுகத்திலும், இராமர் 24-வது யுகத்திலும் இருந்ததாகக் கூறுவர். அன்றியும் 5000 ஆண்டு வட்டம் என்ற "யுகம்" நான்கு கிளை யுகங்களாகப் பிரிக்கப்பட்டு வந்ததென்றுங் கூறுவர்:—கிரேதா யுகம் 2000 ஆண்டுகள் கொண்டது; திரேதாயுகம் 1500 ஆண்டுகள்; துவாபரயுகம் 1000 ஆண்டுகள்; கலி 500 ஆண்டுகள். இவ்வாறு 4 கிளையுகங்கள் கொண்ட பேருகம் ஆகிய 5000 ஆண்டு வட்டம் முடிவுபெற்றதும், மீண்டும் மற்றொருவட்டம் அம்முறைப்படியே கணக்கிடப்படும். துவாபர யுகமுடிவில் 28-வது யுகத்தில் கிருஷ்ணன் இருந்ததாகவும், குருக்ஷேத்திர யுத்தம் கலியுகந் தொடங்கி500 திங்கள் கழிந்து நடைபெற்றதென்றும் புராணங்கள் கூறுகின்றன.

குருக்ஷேத்திரப் போருக்குப் பிறகு கணக்கிடுவதில், அப் போர் நிகழ்ச்சியை எல்லையாகக் கொண்டு நூறு, நூறு யாண்டுகள் கொண்ட நட்சத்திரயுகங்களாகக் கணக்குவைத்து எழுதிவந்தனர். அரசர் முதலியோரின் ஆட்சி காலங்கள் அதனால் ஆண்டுகளாகவே குறிக்கப் பட்டு வந்தன. சப்தரிஷி மண்டிலத்திலுள்ள ஏழு இருடிகள் பூர்வஷாத்தில் இருந்த காலத்தில் மகாபத்ம நந்தன் அரசுபுரிந்ததாகப் புராணங்கள் கூறும். புராணங்களில் மகாபத்மநந்தன் அரசெய்திய நிகழ்ச்சி காலவரையறைக்கு மிகவும் சிறந்ததாகக் கொள்ளப்படும். பின்னல் வந்த வரன்முறை நூலாசிரியர்கள் 27 நட்சத்திர யுகங்கள் கொண்ட ஒரு முழு யுகமாகிய 2700 ஆண்டுகளை அந்நிகழ்ச்சிக் காலத்துடன் சேர்த்து அதுவே புதுக் கலியுகத் தொடக்கம் என்று கணக்கிட்டனர். இதுவே தற்போதைய கலியுகம். கி. பி. 1934-ம் ஆண்டில் அது இக்கணக்குப்படி 5035 ஆண்டுகள் முடிந்ததாக இருக்கிறது. இந்தியப் பஞ்சாங்கங்கள் இக்கணக்கை ஒழுங்காக வைத்து வருகின்றன. இக்கணக்குப்படி மகாபத்மநந்தன் அரசுக் கட்டில் எய்தியது கி. மு. 401. இந்த ஐயாயிரவாண்டு யுகம் கி. மு. 5958-ல் தொடங்கிற்று. அது முதல் இந்திய வரலாறு மிகவும் சரியாகவே குறிக்கப்பட்டு வந்திருக்கிறது.

மாந்தாதா	இருந்தது	கி. மு. 3459
இராமர்	இருந்தது	கி. மு. 2124
கிருஷ்ணன்	இருந்தது	கி. மு. 1458
குருக்ஷேத்திரப்போர்		கி. மு. 1416
அஜாதசத்துரு ஆண்டது		கி. மு. 527
மகாபத்மநந்தன்	,,	கி. மு. 401
சந்திரகுப்தன்	,,	கி. மு. 320
பிறவுமிவ்வாறே.		

இந்தத் தேதிகள் புராணங்களைக் கொண்டே இந்திய பஞ்சாங்கக் கணக்குப்படி குறிக்கப் பட்டனவாகும். சந்திரகுப்தன் காலத்தையும் மற்ற மன்னர்கள் சிலர் காலத்தையும் வேறு ஆதாரங்களைக்கொண்டு கணக்கிட்டுள்ளார்கள். அம்முடிபுக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை வியக்கத்தக்கதாகும். எனவே, புராணங்கள் குப்பைகளுமல்ல கூளங்களுமல்ல; பண்டைய இந்திய வரலாற்றைக் குறித்துவைத்துள்ள உண்மை வரலாற்று நூல்களே.

— கா. சிவ. க.

(இந்து)

தமிழர் நாகரிகம்

[திரு. S. சோமசுந்தர பாரதியார்]

தமிழர்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சிறந்த நாகரிகமுற்றிருந்தனர். தொல்காப்பியர் தமக்கு முன்புள்ள இலக்கியங்களைப் பார்த்தும், தாம் கண்ட உலகியலைப் பற்றியும் நூல் உரைப்பதாகச் சொல்லியுள்ளார். ஆதலின் அவர் காலத்திற்கு முன்பே இலக்கியம் ஏற்பட்டிருந்ததால் தமிழ்மக்கள் சிறந்த முன்னேற்ற நிலை எய்தியிருந்தனர் என்பது பெறப்படுகின்றது. தமிழர் பிற நாட்டினின்றும் குடியேறின ரல்லர். அங்ஙனம் சிலர் கூறுவது சாலாது.

தமிழர் குறிக்கோள்

ஒவ்வொரு மக்களும் ஒவ்வொரு குறிக்கோள் கொண்டு வாழ்தல் இயற்கை. தமிழர் கொண்ட குறிக்கோள் யாது? மக்களால் நன்கு மதிக்கப்படும் பொருளையெல்லாம் குறிக்கோளாகக் கொண்டனர். அப்பொருளாவது, அகப்பொருள், புறப்பொரு ளென்பனவாகும். அகப்பொருள் மனத்திலழியா இன்பம் நல்குவது. வெளியுலக இன்பம் நல்குவது புறப்பொருள்; இப்பொருள்களைப் பற்றியே அக்கால இலக்கியங்கள் எழுந்தன. அகத்தைக் காதல் முறை என்றும், புறத்தைப் போர் முறை என்றும் கொண்டனர்.

ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டால்தான் அதன் சிறப்பு விளங்கும். ஆரியரொடு தமிழ் நாகரிகத்தைச் சீர்தூக்கிப் பார்ப்போம்.

காதல் முறை

ஆரியர் வட நாட்டின் ஒரு பாங்கரில் ஒழுக்கத்தோடும் பிறவற்றோடும் ஒவ்வாத பெருந்திரளான மக்களிடையில் வாழ்ந்து வந்தனர். அவர்களால் இவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன. அவ்விடையூறுகளை நீக்குவதற்கு அல்லும் பகலும் உழைத்து வந்தனர். அவர்களுடன் போர் புரிவதற்காக ஆண்பிள்ளைகள் வேண்டியிருந்ததானும், குடும்ப முன்னேற்றத்திற்காகவும் தமிழர் காதல் முறை போலாது இளமையிலேயே மணம் புரிந்து வாழ்ந்து வந்தார்கள்.

தமிழர்கள் வடவேங்கடம், தென்குமரி வரையில் பிறருடன் தொடர்பிலாது தனித்து வாழ்தலின் போர் முதலிய செய்தற்கு இடமில்லாமல் இனிது வாழ்ந்தனர். மக்கள் முன்னேற்றத்திற்குப் பசியும் காதலும் முக்கியமானது. தமிழர் போர் இன்மையின் இனிய பொருளை விளைவித்து உண்டு வந்தனர். தமிழர் களவு முறையாகவும், கற்புமுறையாகவும் மணம் நிகழ்த்தி வந்தனர். அவர்களது களவு முறை பிழையென எண்ணுவார் சிலருளர். அவர்களது களவுமுறையின் சிறப்பினை உணராதார் கூற்றே அஃதாகும். "அன்பும் மடனும்" என்ற சூத்திரத்தின் அரும்பொருளைத் துருவி ஆராயின் அதன் சிறப்பு தெற்றென விளங்கும். அன்பு முதலிய நான்கும் கைவரப் பெற்ற பின்னரே கற்பு மணம் நிகழும். அம்மணம் தமிழர்களது சிறந்த நாகரிகத்தைப் புலப்படுத்துவதாகும்.

போர் முறை

ஆரியர் இடையறாது எழுந்த தம் பகைவரை வெல்லுவதற்கு ஒரு குழுவினை ஏற்படுத்தினர். அக்குழுவிற்கு க்ஷத்திரியர் எனப் பெயரிட்டனர். அவர்களை உலகப் பற்றின்றிப் போரையே குறிக்கோளாகக் கொண்டு வாழவைத்தனர். ஆரியர்கள் அவர்கட்குப் போர் முதலியனவற்றைப் புகட்டும் ஆசிரியர்களாக அமைந்திருந்தனர். இவைகளை வலியுறுத்தியே சாத்திரங்கள் எழுதப்பட்டன.

தமிழர்கள் போரின்மையால் வீரமின்றியிருந்தனரல்லர். தாமாக வலிந்து ஒருவரிடம் போர்க்குச் செல்லாது, பிறர் தந்நிலத்திற்கு வந்து போர்க்கு அழைத்தால் அவருடன் எதிர்த்துநின்று போர் செய்து வெல்லும் ஆற்றலுடையராக விருந்தனர். இஃது தொல்காப்பியத்தால் நன்கு விளங்கும். சங்க காலத்திற்கு முன்னரெழுந்த திருக்குறள் முதலியவற்றாலும் இஃது விளங்கும். இவைகளால் தமிழரது போர் முறையின் சிறப்பு நனி விளங்குகின்றது.

தொல்காப்பியத்தில் சாதிவேற்றுமைக்கு ஆதரவில்லை

தொல்காப்பியர் தமது நூலில் யாண்டும் சாதியைப் பற்றிக் கூறினாரில்லை. திணைகளை வகுத்து அத்திணைக்குரிய மக்களது ஒழுக்கத்தினை உணர்த்தி எம்மக்களுக்கும் உயர்வு தாழ்வு கற்பியாது சென்றனர். தொல்காப்பியத்தின் ஒரு பகுதியாகிய மரபியலில் 69 முதல் 84 வரையுள்ள சூத்திரங்களில் சாதிப்பிரிவு காணப்படுகிறது. அப்பதினைந்து சூத்திரமும் இடையில் செருகப்பட்டதாகத் தெரிகிறது. என்னை? முன்னருள்ள சூத்திரங்களெல்லாம் மர முதலியவற்றிற்கெல்லாம் பெயரிடுவதையும் பின்னருள்ளவையெல்லாம் விலங்கு முதலியவற்றிற்குப் பெயரிடுதலையும் பற்றிக் கூறியதற்கு இயைபில்லாமல் நடுவில் கூறியிருப்பதும், உரையாசிரியர்கள் முன்னுக்குப் பின்னதாக முரணும்படி உரைகூறியிருப்பதும் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

ஆரியமும் தமிழர்க்குரியதே

தமிழர்களில் சிலர் ஆரியம் ஆரியர்க்கே உரியதென்றே எண்ணி அதனைப் புறக்கணிக்கின்றனர். ஆரியம் பொதுமொழி. ஆதிகாவியமியற்றிய வான்மீகர் ஆரியரா? இல்லை. வடமொழியில் ஆரியரல்லாதார் பல நூல்களை யியற்றி யிருக்கின்றனர். ஆதலின் அஃது அவர்கட்கே எங்ஙனம் உரிமையாகும்? பொதுவாக உலகத்தாருக்கு வேண்டிய பொருளை யெல்லாம் வடமொழியில் யாத்தனர். ஆதலின் தமிழர்கள் ஆரியமொழியை வெறுக்காது அதனைக் கற்பரேல் சில ஆரியர்கள் செய்துவரும் சூழ்ச்சியினை வென்று விடலாம்.

ஆரியர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஈண்டு வாழ்ந்து வருவதால் அவர்கள் பிறநாட்டார் என்று கூற இயலாது. அவர்கட்கும் இந்நாடு தாய்நாடே. இம்மொழி தாய்மொழியே. எளியவர்கள் பேசுகின்ற மொழியென எண்ணிப் புறக்கணித்தல் பெருந்தவறு ஆகும். அங்ஙனம் வெறுப்பது தாமே தமக்குக்கேடு சூழ்ந்து கொள்ளும் நெறியாகும். ஆதலின் ஆரியர்களும் தமிழை வெறுக்காது தமிழ் முன்னேற்றங் கருதி உழைப்பாராக.

அக்கால நாகரிகங்களைக் கண்டு இழிவு செய்தல் தகாது. ஏனெனின், அதுவும் அவ்வக்கால நாகரிகமே" (ந. நா.)

திருநெல்வேலிக் கணபதி விலாசக் கொட்டகையில் 30-3-34-ல் நடந்த கம்பர் திருநாள் வாழ்த்துப்பா

சீர்சா லியற்கைச் செம்மை மிக்கதும்
பழைமை தனில்விழு மியமுதன் நிலையதும்
வழக்கி னும்மதிக் கவினினும் உழக்கும்
மறைநான் கினுமுயர்ந் ததுமாம் நற்றமிழ்
மழைபொழிந் துயிர்ப்பயி ரென்றுங் காக்கும்
நம்பற் கன்புசெய் கம்பன் திருநாள்
ஆங்கில வாட்சியிற் சென்னை மாகாண
சமய வறப்பொருட் டலைவரி லொருவராம்
கல்வியுஞ் செல்வமு மல்கிச் சிறந்த
சிதம்பர நாத முதலியா ரவர்கள்
தலைமையிற் றிருநெல் வேலிநன் னகரிற்
திருநா ணடாத்தும் கழகம் வாழ்க
கழகத் தலைவர் அமைச்சர் வாழ்க
இதற்குப் பொருட்டுணை புரிந்தோர் வாழ்க
வந்து கேட்டு மகிழ்ந்தோர் வாழ்க
இத்திரு நாளினும் வாழ்க வாழ்கவே.

—வி. சிவஞானயோகி.

புதுக்கவிகள்-Original Poetry

ஓம்

சென்னை ஆழ்வார்பேட்டை "ஈஸ்வர பாக்கில்", காலஞ்சென்ற
சிவபுரம் நிலக்கிழவரும், அரசாங்கக் கண்காணிப்
பொறிவலாளருமாகிய
திரு. பா. வே. மாணிக்க நாயக்கரின் மகளார்

திருநிறை, குணமாணிக்கத் தம்மையார், M. A., L. T.,

ஐதராபாக்கம்

திரு. இராமு ஜெனார்த்தன முதலியார், B.A., B. Com.,

அவர்களை 27-5-34-ல் கடிமணம் புரிந்த ஞான்று
பாடிக்கொடுத்த

வா ழ் த் துப் பா.

மங்கலம் மங்கலம் மன்றல்சால் மங்கலம் !
பொங்கலர் வேணிப் புனிதனா ரருளான்
மங்கலம் மங்கலம் எங்கணு மங்கலம்! !
கன்னலுங் கமுகுங் கவினுறு கதலியும்

தென்னையின் குலையுந் தேமாந் தளிரும்
முந்துற நான்று மொய்ம்புற மிளிரும்
பந்தரி னுப்பண் பாங்குற வமைத்த
மின்னவிர் சொன்ன மீக்குயர் மேடையிற்,
றுன்னருங் கேளிருந் துகடீர் நண்பரும்

மாயிருஞ் சுற்றமும் மகளிருஞ் சூழ்தர,
ஆயிர நிறைத்ததொள் ளாயிரத் திருபதும்
பத்துட னொன்கும் பல்கிய வாண்டு
சித்திரை கடந்து சேர்வை காசி
நிறைமதி நாளின் நேர்முன் னளில்,

அறம்பயிற் செல்வர் ஐதரா பாக்கம்
வருமிரா மன்றன் வாய்ப்புறு மகனார்
பெருமைசால் பீ.ஏ., பீக்காம் தேர்ந்த
ஜனார்த்தன மகிபன் ஐயமுட னோர்ந்து
பணைமுடி மணியினும் பண்பு மிகுத்த

குணமா ணிக்கக் கோதறு மணியை
தினமாக் கைக்கோடு திகழுற நின்றான்;
உறவினர் வாழ்த்தினர்; ஊரவர் ஏத்தினர்;
சிறப்புடன் சீருஞ் செய்தனர் பல்லோர்,
அந்தரத் துந்துபி யார்த்தது விசும்பில்;

சுந்தர நங்கையர் சொரிந்தனர் பூமழை;
சிவபுரக் கிழமைச் சிறப்பினை யிகழ்ந்து
சிவபுர மெய்திய சீர்சா லண்ணல்
மாணிக்க நாயக மாமதி வாணரும்
பேணி மகிழ்ந்து பெருமித மெய்தினர்;

திருமண முடித்துத் திகழ்ந்திடு மிருவரும்
பெருநில மிதனிற் பெரும்புக ழீட்டி,
ஆலெனத் தழைத்து அறுகெனக் கிளைத்து
வாழிய வாழிய வாழிய
ஆழிநுண் மணலினும் வாழிய பலவே.

—திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகத்தார்.

இவ்வாழ்த்துப்பா கழகத்தாரின் சார்பாக, தருமபுர ஆதீன வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி B.A., அவர்களாற் பாடப்பட்டதாகும்.



பேருண்டி யருந்தல்

இரவிலா, பகலிலா?

பகலை யொழித்து இரவிற் பேருண்டி யருந்தல் பெரு வழக்காகி வருகிறது. அடிக்கடி இத்தகைய பேருண்டிகளைப் பலவிடங்களில் அருந்த அழைக்கப்பட்டு அருந்திவருவதனாலேயே சிலருக்கு "இராப்பசி" என்ற போலிப்பசி உண்டாகிறதாகக் கருதுகிறார்கள். அவ்வாறு அருந்துவதனால் உடல் நலங் கேடுறுகிறதென்று அவர்கள் ஊகித்து உணர்ந்து கொள்வதற்குள் அது சுருட்டுப் பிடிப்பதையொத்த விடாப்பழக்கமாகி விடுகிறது.

தூக்கமின்மை, அமைதியின்மை, தீய கனவுகள் காணல், முதலியவையெல்லாம் இரவிற் பேருண்டி யருந்துவதின் பயனே யென்று நம்பப்படுகிறது. சில குறிப்பிட்ட உணவுகளை இராக்காலத்தில் உண்பதால் இத்தகைய நலக்கேடுகள் நேர்வது உண்மையே; ஆயினும் படுக்கைக்குச் செல்லுமுன் எதை உண்ட போதிலும், அதனால் வேறெத்துன்பம் நேராவிடினும், தீயகனவுகள் காண்பது மட்டும் இயல்பு.

உணவுப் பொருள்களிலுள்ள மாச்சத்துக்களும் சருக்கரைச் சத்துக்களும் ஈரற்குலையை யடைந்து அங்கே "குலைச் சருக்கரை" (Glycogen) யாக மாறுகின்றன. இம்மாறுதல் உணவு உட்கொண்டது முதலே தொடங்குகிறது. தொடக்க முற்று ஐந்து மணி நேரங்கள் ஆனபிறகு, ஈரற்குலையிலுண்டாகும் இச்சருக்கரை வெளிப்பட்டுச் செந்நீருடன் கலப்புறுகிறது. இக் "குலைச் சருக்கரை" மூளையை ஊக்கும் திறம் வாய்ந்தது. (எனவே, படுக்கைக்குப் போகும் நேரத்திற்கு முன், அதாவது பத்து மணிக்கு முன் ஒருவர் பேருண்டியருந்தினால் இரவு இரண்டு அல்லது மூன்று மணிக்கு உறக்கங் கலைந்து அலைவுறநேரும்.)

மாலை ஆறுமணிக்கே பேருண்டி யருந்துவதாயிருந்தாலும் அதுவும் நல்ல உறக்கத்தைக் கெடுக்கக் கூடியதேயாகும்—செரிப்பின்மையோ இன்றேல் மூளைத்துடிப்போ காணுதல் கூடும். எனவே, நடுப்பகலே பேருண்டி யருந்துதற்கேற்ற நேரமாகும். அவ்வாறு அருந்தினால் "குலைச்சருக்கரை" தோற்றமுற்றுச்

செந்நீரிற் கலப்புறுவதாகிய நிகழ்ச்சி, ஒருவர் அலுவலிலீடுபட்டிருக்கும் நேரமாகிய மாலைப்பொழுதிற் குள்ளேயே நிகழும். இவ்வாறு நிகழ்ந்து மூளையின் ஆற்றல் வலுப்பெறுவதால் அலுவலில் ஒருவர் பெருந்திறந்தெரிக்கும் பயனைப் பெறுதலுங்கூடும். மேனாட்டார்களும், அவர்களைப் பின்பற்றும் நந்நாட்டார்களும் இரவிற் பேருண்டி யருந்தும் வழக்கத்தை யொழித்துப் (பண்டைய தமிழர் ஒழுக்கம்போல்) பகலில் உட்கொள்ளப் பழகினால் உடல்நலமும், பேராற்றலும், வனப்பமைந்த தோற்றமும் பெறுதல் எளிதாகும்.

அழுது வடியும் உடற்றோற்றமும், நாற்றம் வீசும் மூச்சுவிடுதலும், மட்டற்ற நீர்வேட்கையும், மலச்சிக்கலும், ஏனைய பல இடர்ப்பாடுகளும் இரவிற் பேருண்டி யருந்துவதனாலேயே யுண்டாகின்றன. (நந்நாட்டாரிற் பலர் பாலும் பழமுமே இரவில் உண்ணுவதென்ற பழக்கத்தைக் கைக்கொண்டிருப்பது ஓர்ந்து சிந்தித்தற்பாற்று.) * * * பால் ஏற்ற உணவேயாயினும் அதையும் படுக்கைக்குச் செல்லுங்கால் அருந்திப்படுக்கும் பழக்கத்தையும் ஒழித்தல் வேண்டும். நோய் முதலிய ஏதுக்களினால் இன்றியமையாது அந்நேரத்தில் அருந்த நேர்ந்தாலொழிய மற்றைக் காலங்களில் படுக்கை நேரத்தில் அருந்தலாகாது. நீர்ப்பொருள்களை அருந்தல் உணவு உண்பதைவிடக் கெடுதிபயப்பதாகும். காப்பிநீர் அருந்தல், எக்காலத்திலுங் கெட்டது. அதைமாலைப் போதில் அருந்தும் ஒருவர் மன உறுதி குறைந்தவராயின் இரவில் அவர் தூக்கமின்றி அல்லற்படுதல் பெரும்பான்மை உறுதியாகும்.

(ஹெல்த் அண்டு எஃபிஷியன்ஸி.) — கா. சிவ. க.

கடைச்சரக்குகளைப் பயன்படுத்தும் முறை

['காசிகன்' எழுதுவது]

சதகுப்பை (Dill Seed)

குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, வாயு, குன்மம் முதலிய நோய்களுக்கு மூன்று திரும் சதகுப்பையின் விதையை அரைத்து அரைப்புட்டி கொதிக்கிற நீரிற்போட்டு வைத்து இரண்டு மூன்று மணி நேரங் கழிந்து ஆறியபின் வடிகட்டி அரைக்கால் அவுன்ஸ் முதல் அரை அவுன்ஸ் வரை சிறிது சர்க்கரை சேர்த்துக் கொடுத்துவர நோய் நீங்கும் என்று கூறுவார்கள்.

திரு. பூவை. கலியாண சுந்தர முதலியார்

(முகப்புப் படம் பார்க்க)

தொண்டை மண்டலத்திலே புலியூர்கோட்டத்திலே புத்த வேடென்னும் நத்தத்திலே உயர்துளுவ வேளாள குலத்திலே பூவிருந்தவல்லியார் மரபிலே வாயிலார் நாயனார் பரம்பரையிலே 10—5—1845ல் திரு. முதலியார் அவர்கள் பிறந்தார்கள்.

இவர் தந்தையார் பெயர் திரு. அண்ணாசாமி முதலியார்; தாயார் உண்ணாமுலை யம்மையார். இவர் தமையனார் சுந்தர வடிவு முதலியார். இவர் தங்கையார் நால்வர். 1879-ல் பார்ப் பாத்தி யம்மாள் என்பாரைத் திருமணம் முடித்தார். இவருக்கு 1883-ல் சிவபூஷணம் என்னும் குமாரன் பிறந்து 1908-ல் இறந் தான். சிவநேசம் என்ற ஓரே பெண் மட்டுமிருந்து வருகிறார்.

இவர் இளமையிற் பூவிருந்தவல்லி பூங்காவன உபாத்தி யாயரிடம் பிரபந்தங்களும், சொர்க்கபுரம் இராமலிங்க தம்பிரான் சுவாமிகளிடம் புராணங்கள் காரிகை முதலியவைகளும் பேறை ஜகந்நாத பிள்ளை யவர்களிடம் இலக்கணம் முதலிய பிற நூல் களும் பயின்றனர். சொல்வன்மையிலும் கட்டுரைவன்மையிலும் ஒப்புயர்வற்று விளங்கினார். ஆங்கிலமும் செவ்வையாகக் கற்றுத் தேர்ந்தமையால், சிறிது காலத்தில் அரசாங்கத்தில் அலுவல் பார்த்துப் பின் நீங்கினார்.

இவருக்கு மட்டற்ற ஆதரிப்பாளர்களும் நண்பர்களும் இருந் தார்கள். அவர்களில், திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர், திருத்துறையூர் சிதம்பர சிவப்பிரகாச பண்டாரசந்நிதிகள், சூரியனார்கோவில் முத்துக்குமார தேசிகர் காஞ்சி மெய்கண்ட சிவாசாரிய சந்தானம் ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள், முருகதாசரென்ற தண்டபாணி சுவாமிகள், பாஸ்கர சேதுபதி அவர்கள், அருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், மறைமலை யடிகள், திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள், திரு. ஜே. எம் நல்லசாமி பிள்ளையவர்கள் சிறப்பாக எடுத்துக் காட்டக்கூடியோர்.

புராணப்பிரசங்கஞ் செய்வதில் நற்பெயர் பெற்ற இவர் சென்னை நடராஜ சபை யென்றும் மெய்கண்ட சந்தானசபை என்றும் இரண்டு பெருஞ் சபைகள் நிறுவி சமயத்தொண்டாற்றி வந்தார். ஊதியங் கருதாது உழைத்து வருவதே இவர் நோக்கம். சித்தாந்தம் என்ற திங்கட்டாளையும் சிலகாலம் ஆசிரி யராயமர்ந்து நடத்திவந்தார்.

இளமைதொட்டே இவர் பாட்டுப்பாடுவதில் இயற்கை வல் லமை வாய்ந்திருந்தார். திருமுருகாற்றுப் படையை இவர் தாரக மந்திரமாக ஓதிவந்தார். பாடினால் பாடியவாறே பயன் விளைக்கக்

கூடிய நிறைமொழி மாந்தரில் ஒருவராக இருந்தார். அழுத்த மான சிவப்பற்று உடையவர். இவர் தனிச்செய்யுட்களும் பதி கங்களுமாக இயற்றியவை நீங்கலாக, நூல்களாக இயற்றியவை நாற்பதிற்கு மேற்பட்டன. திருத்தி அச்சிட்ட நூல்கள் 96-க்கு மேற்பட்டன. சாத்துகவிகள் மட்டும் 864ம் அதற்குமேலும் என்ப. இவர் மாணவர்கள் எண்ணற்றவர்கள், நற்புலமைவாய்ந்த வர்கள். மணி திருநாவுக்கரசு முதலியார், வல்லை சண்முக சுந்தர முதலியார், வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர், புழலை திருநாவுக்கரசு முதலியார் முதலியோர் மாணவர்களிற் சிறந்தோராவர்.

பரதகண்டேதிகாசம், நீதிசாகரம், திரிபுரசுந்தரிமாலை, செங்கற்பட்டு மகாத்மியம், கடம்பன் கவசம், சிவராத்திரி புராண வசனம், சித்தாந்தக் கட்டளை, பூவாளூர்த்தல புராண வசனம், திருவொற்றியூர்க் கலம்பகம்; செய்யுளிலக்கணம், சித்தாந்த வசன பூஷணம், சைவக்கிரியாதிகாரம், சித்தாந்த பரிபாஷை, தாயுமா னார் மெய்கண்ட விருத்தியுரை முதலியவை இவர் பல துறை களிலும் இயற்றிய நூல்களுட் சில.

சித்தாந்த சரபம், அஷ்டாவதானம், பூவை. கலியாண சுந்தர யதீந்தரர் என்ற இப்பெரியார் 1918-ம் ஆண்டிற் சிவனடி நீழல் எய்தினார்.

செய்திகளும் குறிப்புகளும்

News and Notes

சிவபுரம் நிலக்கிழவரும், சென்னை அரசாங்கக் கண்காணிப் பொறிவலாளருமாயிருந்து காலஞ் சென்ற தமிழ்ப் பெருமகனார் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களின் அருமை மகளார் திருநிறை குணமாணிக்கத் தம்மையார் M. A. L. T., அவர்களுக்கும் ஐதராபாக் கம் திரு. இராமு ஜெனார்த்தன முதலியார் B.A.B. com அவர் களுக்கும் சென்ற 27-5-34-ல் அன்பழகிளமை யருளுவாகிய முருக னருளால் நன்மணம் நிறைவேறியது. மணமக்கட்கு எம் வாழ்த்து உரியதாகுக.

* * *

இச் சூன் திங்கள் 10-ம் நாள் 11-ம் நாளில் எல்லையில் புகழ் பெறு நெல்லைமாநகரில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு கூடப் போவது கருத்திற் பதிக்கற்பாலதாய ஒரு நிகழ்ச்சியாகும். அம் மா

நாட்டிற்குச் செந்தமிழ்ப் புரவலர் திரு. உமாமகேசுரம் பிள்ளையவர்கள் தலைமை வகிப்பதும், அம்மா நாட்டின் சார்பில் நடைபெற விருக்கும் தமிழ்ப்புலவர் மாநாட்டிற்கு உயர் திரு. மறைமலை யடிகளார் தலைமை வகிப்பதும், சென்னை வளர்ச்சிநெறி யமைச்சர் திரு. தி. பொ. இராஜன், டில்லி சட்டசபைத் தலைவர் ஹானரபிள் ஸர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார், திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் முதலிய பெரியார்கள் ஆங்குச் சென்று கலந்துகொள்ள இசைந்திருப்பதும் தமிழ்த்தாயின் நற்காலத்திற்கு அறிகுறியே யாகும். என்றும் அழியா இயல்பும் மாறாஇளமை நலனும், அளப்பரும் ஆற்றலும் வாய்ந்து ஒளிரும் தமிழ்மொழியைக் கல்லாதார் பரிந்து கற்குமாறும், மதியாதார் உணர்ந்து மதிக்குமாறும், சர்வகலாசாலையார் இகழ்ந்தொதுக்காமற் புகழ்ந்து போற்றுமாறும், அரசாங்கத்தார் வலுவில் முற்போந்து ஆதரிக்குமாறும், ஆரியர்கள் என்று தம்மைப் பிறழ உணர்ந்திருக்கும் பெரியார்கள் உண்மை யுணர்ந்து தமிழ்மொழி தம் மொழியே என்று உரிமை பாராட்ட முன்வருமாறும், தமிழர்கள் பெருமிதத்துடன் மார்புதட்டி மொழியின் தூய்மையையும் செம்மை மேம்பாட்டையும் ஒப்பற்ற தனிப்பெருமையையுங் காத்து நிலைநிறுத்த ஆர்வத்துடன் எழுமாறும் உயர்பணியாற்றுவது அம்மாநாட்டின் கடமையாகும். இறைவன் அஃது நிறைவேறுமாறு தோன்றாத்துணையாக இருந்து ஊக்குவிப்பானாக.

* * *

"ஒருவர் தும்மினால் உடனே அவரை நீடூழி வாழ்க" என்று வாழ்த்தும் பழக்கம் கிறித்துவர்களிடமிருந்து தான் பிறரால் கற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதென்று துணிந்து கூறலாம். கிறித்து பிறப்பதற்குப் பல்லாண்டுகள் முன்பிருந்தே இப்பழக்கம் பிற மதத்தாரிடமும இருந்து வந்துளது போலும்" என்று ஒன்றுக்கொன்று முரண்பட ஒரு ஆங்கிலக் கதை நூல் கூறுகிறது. கிரேக்கர்கள் தும்முவதை நல்ல சகுனமாகக் கருதி வந்தார்கள் என்பதை "ஸெனுபனின் மீட்சி" என்ற நூலிற் காணலாம். நந்தமிழ் நாட்டிற் சிறு குழந்தைகள் தும்முங் காலத்தில் அருகிலிருக்கும் பெற்றோர் பெரியோரெல்லாரும் முதல் தும்மலுக்கு நூறென்றும், இரண்டாவதற்கு "இருநூ"றென்றும், மூன்றாவதற்கு "முந்நூ"றென்றும், அதற்குமேல் "தீர்க்காயுசு" என்றும் வாழ்த்தக் கேட்டிருக்கலாம். இது கிறித்தவர்களிடமிருந்து கற்றதென்று கோடல் சாலுமோ?

* * *

திருவாசக மணிகள்:—தேனூறும் வாசகங்கள் அறநூறில் நூறு பாக்கள் வரை பொறுக்கி யெடுக்கப்பட்டு, திருவாசக மணிகள் என்னும் பெயருடன் ஒரு சிறு நூலாக வெளியிடப்பட்டுள்ளன. பெயருக்கேற்ப ஒவ்வொரு பாட்டும் மாணிக்கமணியே என்று மதிக்கப்படுமாறு, பாடல்களின் பொருளும் ஆழ்ந்த கருத்தும் யாழ்ப்பாணத்துப் புலோலி திரு. சு. சிவபாதசுந்தரம் பிள்ளை யவர்களால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. திருவாசக முழுமைக்குமே இத்தகைய ஒருரையைப் பிள்ளையவர்கள் எழுதின் நலம் பயப்பதாகும். இச்சிறு நூலின் விலை அணா மூன்றே. நங்கழகத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பன்னும் விளக்கினிற் பயனிலை யாகும் பகர்விளக்கும்
மன்னிய தேச மடையப்பின் னவ்விரு ளானதுதான்
றுன்னுவ தென்கொலச் சொல்விடு காரியத் தோற்றமின்றும்
மன்னிய மேற்சொல் திட்டாந்த மதற்கும் வழக்கிதுவே. 30

அந்தவி ரோதத் திருளை யபிபவமா கச்செய்ய
வந்தவி ளக்குக்கு மாறாத் தொழிலைம தித்துரையா
யிந்தநல் லாணவந் தானேய ஞதியெ னுஞ்செய்யுடான்
றந்தபொ ருளையும் தானறிந் தாயிலை சாலநன்றே. 31

அக்கினி வெம்மை யடக்கும விடத்ததாம் பெலத்தைத்
தக்கமிலா மல்ல பிபவஞ் செய்த தனிமணிதான்
மிக்ககலாம விருந்த வளவு மிகு செருப்புத்
தொக்கினர் தம்மைச் சுடுமணிபோகிற் சுடுவதின்றே. 32

சொன்ன மருந்தின் பெலத்தை யடக்குஞ் சுடர்மணிக்கு
மன்னிய வக்கினி வெம்மை யடக்கும் மருந்துக்குத்தான்
துன்னிய பிபவஞ் செய்தொழி லென்றுந் துடர்ச்சியென்ப
துன்னியு மைசெய் யுரைப்போ மிதன்றியு மோர்ந்துகொள்ளே. 33

மன்னுங் கலைமுத லாகுங் காணங்கள் வந்ததனான்
மின்னியி ருந்த வளவு மறிவும் விளங்கியிடு
மன்னக லைமுத லாயின நீங்கி னறிவிலதாற்
சொன்ன கலாதிக் கபிபவ மென்னுந் தொழினித்தமே. 34

சென்றிவ் வுயிரின் குணத்தை யபிபவஞ், செய்தமல
மன்றொரு காலத் தபிபவஞ் செய்திங் ககன்றதுவோ
வின்றள வுஞ்சொல் லபிபவஞ் செய்திங் கிருக்கின்றதோ
வொன்றை விசா ரித்துரை யாவு வந்திடவே. 35

அன்றொரு காலத் தபிபவஞ் செய்திங் ககன்றதெனி
லின்றிறையா லம்மலத்துக் கபிபவ மென்கொலையோ
சென்றொரு சாத்தனைக் கொற்றன் புடைத்தவன் சேர்ந்தபின்னே
யொன்றிய சாத்தனை யேன்புடைத் தாயென் றுரைநவின்றே, 36

ஒன்றுநற் சாத்தற் குரியவர் வந்திங்குயர் கொற்றனைப்
பொன்றுவ்..................புடைத்தாலது பூவுலகி

னன்றயர் சாத்தன் பிழைத்தற்கு நன்மருந் தாயிடுமோ
வின்றநின் வாக்கில் வசன விரோதமு மெய்தியதே. 37

இன்றளவும் நல்லுயிர்க்கு........யிருண்மலமுந்
துன்றிய பிபவஞ் செய்திருக் கும்மெனச் சொல்லிடினீ
பொன்றுத லற்ற புகழ்முத்தி யின்கண் புகல்சிவனு
மென்று மலத்துக் கபிபவஞ் செய்வ னெனவியம்பே. 38

உரைத்த விசேடத் தபிபவஞ் செய்கின்ற வொண்பொருட்கு
வரைத்தியம் பாத்தொழி லுண்டென் றுரைத்து மலமறைப்பா
நிரைத்த தொழிலை யபிபவஞ் செய்கின்ற நின்மலற்கும்
புரைத்த தொழிலென்று நீங்காத தென்னப் புகழ்ந்துரையே. 39

அன்றியுஞ் சத்தியச் சோதியெனு நல்லருட் குருவு
மின்றுயிர் தங்கட் கனுக்கிர கத்தா லியம்பினதா
யொன்றருள் செய்மோட்ச காரிகை தன்னி லுரைத்திருக்கு
நன்றுரை தன்னை யறிந்திலை நாமு நவிலுதுமே. 40

சாருஞ் சிவசத்தி யான்மாவின் வேத்தி தருவதென
வாரும் புகழ்சைவ சித்தாந்தஞ் செப்ப வதுதெரியா
தோரும் பரமத வாதியும் வெஞ்சக முள்ளளவே
சீருறு வெங்கியந் தானும் விளங்குஞ் சிறந்தொன்றுமே. 41

வெஞ்சகம் போனபின் வெங்கியந் தானும் விளங்கலின்றும்
வஞ்சமின் முத்தர்க்கு மிவ்வண்ணம் வந்து மலமறைக்கும்
மெஞ்சலி லாமுத்தி சொல்லுவ தென்கொ லெனச்சொல்லவே
துஞ்சலில் சத்தியச் சோதிசொல் வாக்கியஞ் சொல்லுதுமே. 42

வெஞ்சக மாகும் சிவசத்தி சன்னிதி மேவியென்றுந்
தஞ்சம தாயுயிர் நீங்காது கூடித் தரிக்கையினால்
துஞ்சலி லாவுயிர் வேத்தியு முண்டென்று சொன்னதுவுஞ்
செஞ்சொலி னாற்சைவர் செப்பிய தின்றே தெரிந்துனக்கே. 43

மலபரி பாகம் வந்தாற் சிவசத்தி மலமதனை
விலகவ பிபவஞ் செய்தபின் சீவன் விசுத்தமுற்றே
யிலகிய தன்சத்தி யாலு மலத்தினை யேற்றிடுமால்
நிலவுஞ் சிவசத்தி யென்றுனை யென்றும் நிகழ்த்திடிலே. 44

ஈசனும் புற்கலன் றானுமி சைந்திங் கிருண்மலத்தை
நாசம தாக வபிபவஞ் செய்வ னெனநவின்றாய்
பேசிய முத்தியி லீசன் றுணையைப் பிரிப்பதென்னோ
பாச மகல வரனு மபிபவம் பண்ணினனே. 45

அந்தச் சிவசத்தி தன்னா லபிபவ மானமல
மிந்த வுயிர்ச்சத்தி யாலு மபிபவ மென்கொலையோ
முந்தைச் சிவசத்தி யாலே மலசத்தி மோசித்தபின்
றந்த வுயிர்சத்தி யாது புரிந்தது சாற்றுகவே. 46

ஆணவ சத்தியை யெல்லா மகற்றுழி யாங்கதிலே
தாணுவின் சத்தியிற் றீராத சத்தியுஞ் சற்றுளதோ
காணு முயிர் மற்றதனை யபிபவங் கண்டதுவோ
வீணின் மலசத்தி யெல்லா மகற்றிப் பின்வீட்டிடவே. 47

ஆணவஞ் சேரி லுயிர்க் குள்ளசத்தி யகற்றியதோ
பூணுஞ் சிவசத்தியா லொழியாததைப் போக்குமெனிற்
பேணும் பிரானிற் பெரிதா முயிர்சத்தி பிஞ்ஞகனாற்
காணுஞ் சருவ கிரித்திய மென்பதுங் கண்டிலமே. 48

சிந்தமல சத்தி யெல்லா மான்முனந் தீர்த்தகல
வந்தமல சத்தி தன்னை யுயிர்சத்தி மாய்த்ததெனிற்
பந்தமிலாப் பரன் பாசத்தைத் தள்ளிப் பரையதனா
லந்தமி லானந்த நல்குவ னென்பதை யாய்ந்திலையே. 49

அன்றான் பாச மகற்றி விடுத்தபின் னாருயிருந்
துன்று மலந்தனைப் போக்கிடு மென்றுரை செய்ததென்னோ
வொன்று மலபரி பாக மடைந்தபி னோங்குயிர்தான்
வென்று மலத்தை யடக்குமென் றாலென் விளம்புகவே; 50

செம்பிற் களிம்பை யிரத குளிகை சிதைத்ததுபோல்
நம்பான் சத்திம லத்துக்கு நாசத்தை நல்குமென்ற
வும்பர்கள் போற்றும் வசன விரோதமுண் டாமதனால்
இம்பரி லிவ்வண்ண மியாங்களி சைத்தன மென்றிடிலே. 51,

செம்பிற் களிம்பை யிரத குளிகைமுன் தீர்த்தகலப்
பம்புங் களிம்பு திரும்பிப் பொருந்தும் பரிசுதன்னை

மொய்ப்புற செப்புகன் சத்தியிற் றீர்த்தன் மொழியவரும்
வம்பிது காணிப் படியா கமத்தில் வசனமின்றே. 52

மலத்தை யிருளென் றுங் காளிம மென்று மதித்தானைத்
துலக்கும் பரிதி குளிகையென் றாகமஞ் சொன்னதுபோல்
கலக்க வுயிர்க்கித் திறமா கமத்திற் கழறலின்றால்
அலைக்கு மறிவுள வான்மா மலத்தை யகற்றலின்றே. 53

விளக்கொன் றுவந்திரு ணீக்கிப் பொருளை விளக்கியபின்
விளக்கொன் றுவந்த தனோடு பொருளை விளக்குதல்போற்
றுளக்கொன் றிலாது மலந்தீர்த் தருளிய சோதியுடன்
றுளக்கொன்றி லாமுத் தருந்தீர்ப் பாணவத் துன்பத்தையே. 54

இவ்வா றிசைத்திடின் முன்சொன்ன குற்றமு மின்றிறைவன்
செவ்வான சத்தி சகாயமுந் தீர்ந்த தெனைச்செப்பினீ
யெவ்வாறு பின்வந்த தீபமுங் காரண மென்றிசைத்தா
யொவ்வாது நீசொல்லும் வார்த்தை தவறென் றுரைக்குவமே. 55

விளக்கை மறைத்த விருளையு நீக்கும் விளக்குமுண்டோ
விளக்கினைப் போலுயிர் தன்னையுஞ் சாற்றல் விதியலகாண்
விளக்கினைப் போலச் சிவனையுரைப்பது வேவிதியாம்
விள்க்கினுக் கின்னம் விளம்புதுங் குற்ற மிகவறியே. 56

நன்று வனைந்த கடத்துக்குப் பின்புற்ற நற்குயவன்
துன்று கடத்து..................ன்றிது சொல்லுவையே
லின்று பிறந்த கடத்துக்குப் பின்னு மிறையருளாற்
சென்றங் கடைந்த கரியையுங் காரணம் செப்புகவே. 57

வந்தநல் யா....................வழங்குவையேன்
முந்திய காரணந் தானென வந்தை மொழியவருங்
கந்தடு மாவுங் குலாலனைப் போற்கட காரியத்தைத்
தந்திடும் யோக்கிய ....சாற்றிப் பன்னே. 58

காரண யோக்கிய முள்ள குலாலற் கடுப்பவிவன்
ஆரிரு ணீக்[illegible]எல்லாப் பொருளு மறிந்திடவே
[illegible]...பகர் விளக்கின்
[illegible]ருறை செய்தநற் ரேட[illegible]றன்று நிகழ்த்திடிலே.

199649

		Rs.	As.
History of Pallavas by R. Gopalan	...	5	10
The Kaveri, The Mukari and the Sangam Age by T. G. Aravamuthan	...	2	12
The Nayaks of Madura	...	9	0
Sources of Vijayanagar History by Dr. S. K. Iyengar	...	5	4
Some South Indian Villages by Dr. Slater	...	5	8
South Indian Customs by Mr. P. V. Jagadisa Iyer	...	3	0
Studies in Tamil Literature & History by V. R. Ramachandra Dikshidar M.A., Lecturer in Indian History, Madras University	...	8	0
The Pandava Kingdom by **K. A. Nilakanta Sastri**	...	6	8
The Dravidic studies 1 to 3	...	2	4
One Hundred Poems of St. Thayumanavar Translated from the Original Tamil by N. R. Subramanya Pillai	...	1	8
Inscription of Asoka by Prof. D. R. Bhandarkar M.A., PH.D.		4	8
India in the 17th century by J. N. Das Gupta	...	3	12
Books by Dr. S. Krishnasamy Iyengar, M.A.			
South India and her Muhamadan Invaders	...	8	0
Some contributions of South India to Indian Culture	...	6	4
Early History of Hindu India	...	1	8
Hindu India from Original Sources **Parts I & II**	...	2	0
Studies in Gupta History	...	1	0
Beginning's of South Indian History	...	3	4
Hindu Administrative Institutions by V. R. R. Dikshitar, M.A.	...	6	0
Rig Veda Hymns. (With Commentary of Sayana)	...	2	13
Indian Cultural Influence in Cambodia by Dr. B. R. Chatterji, D. LITT. PH. D.	...	6	0
Pre-Historic India by Panchanan Mitra of, M.A.	...	7	0
PURANANUTRIN PALAMAI by Mr. K. N. S. Pillai	...	0	14
The Chronology of the Early Tamils by ,,	...	5	8
பரணர் ஆராய்ச்சி (Paranar) by (வித்வான் வேங்கடராயலு ரெட்டியார்)	...	2	12
Dravidic Studies No. 4 by Dr. Mark Collins	...	0	14
Essay on the origin of South Indian Temple by Dr. N. Venkatramanayya	...	1	12
Stone Age in India by Mr. P. T. Srinivasa Iyengar	...	1	2
Historical Inscriptions of South India by Robert Sewell	...	11	0
Studies in Cola History and administration by Mr. K. A. Nilakanta Sastri	...	4	8
The Mauryan Polity by Mr. V. R. R. Dikshitar	...	6	12
Some Aspects of the Vayu Purana	...	1	2
A Report of the Modi Mss in the Tanjore Palace Library	...	1	2
Sivadviata Nirnaya by Mr. S. S. Suryanarayana Sastri	...	2	12
Sivadvaita of Sri Kanta ,,	...	5	12
Samkhya Karika ,,	...	2	8
Samkhya Karika Studied in the Light of the Chinese version		2	8

Reg. No. M. 1725

THE SIDDHANTA DEEPIKA SERIES

	Rs.	As.
A Few Hymns of Manikavachaka Thayumanavar by G. U. Pope, M.A.	0	5
Thiruvunthiar—a Digest by Mr. R. S. Subramaniam ...	3	0
St. Thayumanavar—His Life, Teachings and Mission by Mr. R. S. Subramaniam ...	0	2
The Esoteric Meaning of the Form of the Devi ...	0	1
Mani-Mekalai—by Dr. G. U. Pope, M.A. ...	0	10
Tiruvarulpayan of Umapathisivachariar translated by J. M. Nallasamy Pillai, B.A., B.L. ...	0	6
Age of Gnanasambandar by Prof. Sundaram Pillai, M.A., in Tamil ...	0	12

இந்திய மருத்துவக் கல்லூரி வெளியீடுகள்
இரண்டு அரிய நூல்கள்.

பாலவாகடம் (Diseases of Children) ரூ. 4—12

நஞ்சு நூல் (Indian Toxicology) ரூ. 1—14

குறிப்பு:—இவை ஒவ்வொருவரும் படித்துணர வேண்டிய அரிய பொருள்களை யுடையன.

அறிக்கை

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி

இச் சங்கத்தார் நடத்தி வருகின்ற தனித்தமிழ்த் தேர்வுகள், இவ் யாண்டு, திருநெல்வேலி, திருச்சிறுப்பள்ளி, ஆரணி, சென்னை ஆகிய நான்கு நகர்களிலும், 1934, ஜுன் 28, 29, 30 ஆகிய மூன்று நாட்களிலும் நடைபெறும்.

தேர்வுகட்கு விண்ணப்பித்துள்ளவர்கள் அவரவர்கள் குறித்த தலைநகர்களில் காலந் தவறாது சென்று தேர்வு எழுதவேண்டும். ஒவ்வொரு நாளும் தேர்வு காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

திருநெல்வேலி
31-5-1934

அன்புள்ள,
பு. சி. புன்னைவனநாதன்

The South India Saiva Siddhanta Works Publishing Society, Ltd.,
6, Coral Merchant Street, Madras.

Printed by Mr. C. M. Govindarajan, at The Progressive Printers, Coral Merchant Street, Madras, and Published by Mr. V. Subbiah.

Reg. No. M. 1725

கழகப் புதிய வெளியீடுகள்

ரூ. அ.

கலைபயில் கட்டுரைகள் ராப்பர் விலை ரூ. 1 0
லைப்ரேரிப் பதிப்பு 1 4
மனோன்மணீயம் (அரிய தமிழ் நாடகம்)
Prof. சுந்தரம்பிள்ளை M.A., 3-ம் பதிப்பு
கலிக்கா ரூ. 2 12 ரெக்சைன் 3 0
திருப்புகழ்த் திரட்டு 128 பாடல்கள் (3-ம் பதிப்பு) 0 8
மாணவர் திருப்புகழ் (புதிய பதிப்பு)
(பள்ளிச் சிறுவர்கட்கெனத் தொகுக்கப் பெற்றது) 0 4
ஜகதீச சந்திர போஸ் வரலாறு
ராப்பர் அணா 10 லைப்ரேரிப் பதிப்பு 1 4
திருக்குறள் அறத்துப்பால் தண்டபாணி விருத்தியுரை 1 12
சிவகாமி சரிதை உரை 0 7

1931 புதிய வெளியீடுகள்

அபிதான சிந்தாமணி (2-ம் பதிப்பு) 1640 பக்கம் 10 0
பெரியபுராண மூலம் (சமாஜப் பதிப்பு) 1 8
ஷை திரு. வி. கலியாணசுந்தர முதலியார் குறிப்புரை 7 0
நெப்போலியன் (A. இராமசாமிக் கவுண்டர் M.A.) 1 0
பாப்பா வினம் 0 13
மதுரை மும்மணிக்கோவை குறிப்புரையுடன் 0 5
திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா குறிப்புரையுடன் 0 4
மாறனகப்பொருளும் திருப்பதிகக் கோவையும் 0 15
சிறுவர்க்கான செந்தமிழ் (மறைமலையடிகள்) 1 8
மக்கள் நூறாண்டு உயிர்வாழ்வது எப்படி? 5 0
சாகுந்தல நாடகம் 2 4
ஷை ஆராய்ச்சி 2 0
தாலாட்டும் கும்மியும் (ராய. சொக்கலிங்கஞ் செட்டியார்) 0 4
வீரமாநகர் (R. P. சேதுப்பிள்ளை 1 2
இந்தியப் பொருளாதார நூல்
(அவனாசி லிங்கஞ் செட்டியார்) 2 0
தற்காலத் தமிழ் அகராதி (கலிக்காக் கட்டிடம்) 1 8

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

Printed by Mr C. M. Govindarajan, at The Progressive Printers,
Merchant Street, Madras, and Published by Mr. V. Subbiah
for the S. S. W. P. Society, Tinnevelly, Ltd.